Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00


# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்


மொறாயஸ்
பல், மூக்குக் கண்ணாடியகம்
பல் கட்டுதல், மூக்குக் கண்ணாடி வழங்குதல்
(1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.)
இல. 546, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 7893.

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 பங்குனி – 28 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஸபர் 30 (10.04.2005) ஞாயிற்றுக்கிழமை இதழ்:193

## விடுதலைப் புலிகளின் உயர்மட்டக்குழுவினர் முதன்முறையாக தென்னாபிரிக்கா விஜயம்!



(பிரிட்டோரியா)

அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவினர் முதன்முறையாக தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிரிட்டோரியாவைச் சென்றடைந்த விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக்குழுவினரை, தென்னாபிரிக்க் துணை ஜனாதிபதியின் மூத்த ஆலோசகர் வரவேற்றார்.

இந்தச் சந்திப்பின்போது – அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் – ஐரோப்பிய, ஆபிரிக்க பயணத்தின் முக்கியத்துவத்தையும், நோக்கத்தையும் எடுத்துக்கூறியதோடு, ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தின்போது பேசப்பட்ட விடயங்களையும் எடுத்து விளக்கினார்.

மேலும், தற்போதைய சமாதான நிலைப்பாட்டையும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நிலையையும், சுனாமி நிவாரண கட்டுமானத்தை உருவாக்குவதன் அவசியத்தையும் விளக்கிக் கூறினார்.

தென்னாபிரிக்க அரசாங்கம் சார்பாக – அந்த நாட்டின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர், சமாதான நடவடிக்கையை முன்னெடுக்கும் பிரதான பேச்சாளர் அன்றே ஜாய்மன், ஜனாதிபதியின் ஆலோசனைக்குழுவின் பொறுப்பதிகாரி மற்றும் அதிபரின் உதவியாளர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையுடனான பாதுகாப்பு ஒப்பந்தம்; ஈழத்தமிழர் நலனுக்கு வேட்டுவைத்துவிடும்!



## மன்மோகன்சிங்கிடம் வைகோ எடுத்துரைப்பு

(புதுடெல்கி)

இலங்கை அரசாங்கத்துடன் இராணுவ ஒத்துழைப்பு உடன்பாட்டை இந்தியா செய்துகொள்வது – ஈழத்தமிழர்களின் நலனுக்கு வேட்டு வைப்பதாக அமைந்துவிடும்.

இத்தகைய உடன்பாட்டை ஈழத்தமிழர்கள் மட்டுமன்றி தமிழக மக்களும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

எனவே – இத்தகைய முயற்சிகளை இந்திய அரசு கைவிட வேண்டும் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் வைகோ – இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை நேற்றுமுன்தினம் சந்தித்து நீண்ட நேரம் பேச்சு நடத்தியபோதே வைகோ இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

கடந்த இரண்டு வாரங்களுக்குள் மன்மோகன்சிங்கை இரண்டாவது தடவையாகச் சந்தித்த வைகோ – இலங்கையுடன் எந்த இராணுவ ஒத்துழைப்பு உடன்பாடும் செய்துகொள்ளக்கூடாதென்று வலியுறுத்திக் கூறினார்.

சில மாதங்களுக்கு முன்னர் – வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன்கதிர் காமர் – புதுடெல்கி சென்றிருந்தபோது – பலாலி விமானத் தளத்தை இந்தியா புனரமைத்துக் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக இந்தியா உன்னிப்பாக அவதானிப்பு!


ரணிலிடம் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்

## புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதங்களுடன் சிப்பாய் கைது!

திருகோணமலை – மூதூரில் சம்பவம்

# இந்தியா உன்னிப்பாக அவதானிப்பு!

## ரணிலிடம் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்



நினைவுப் பேருரையில் மன்மோகன்சிங் - ரணில்

(புதுடெல்கி)

அரசுக்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து இந்தியா அவதானித்து வருவதாக இந்திய பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை அவரது மாளிகையில் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

லால் ஜெயவர்த்தன நினைவுப் பேருரையொன்றில் கலந்துகொள்வதற்காக இந்தியா சென்றிருந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதங்களுடன் சிப்பாய் கைது!

## திருகோணமலை - மூதூரில் சம்பவம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மூதூர் - தங்கநகர் பகுதியில் ஆயுதங்களுடன் நடமாடிய இராணுவச் சிப்பாய் ஒருவர் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டார்.

நேற்றுக்காலை 11 மணியளவில் மூதூர் - தங்கநகரில் துப்பாக்கி மற்றும் திசைகாட்டியுடன் நடமாடிய சிறிவர்த்தன என்ற சிப்பாயே புலிகளால் கைதுசெய்யப்பட்டார்.

இவர் 64 ஆம் கட்டை இராணுவ முகாமில் கடமையாற்றுபவர் எனத் தெரியவருகிறது.

இந்த இராணுவச் சிப்பாயை தடுப்புக்காவலில் வைத்திருக்கும் விடுதலைப் புலிகள், இது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடனரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேபகுதியிலுள்ள புலிகளின் பூநகர் முன்னணிக் காவலரண் மீது இராணுவ சீருடை அணிந்த ஆயுதபாணிகள் நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தி ஆதரவாளர் ஒருவரை சுட்டுக் கொன்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### காயமடைந்த துணைப்படை வீரருக்கு

# சிகிச்சையளிக்க விடாமல் படையினர் திருப்பி அனுப்பினர்!

(திருகோணமலை)


மூதூரில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பூநகர் முன்னணி காவலரண் மீது இராணுவ சீருடையினர் நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையிலுள்ள துணைப்படை வீரருக்கு சிகிச்சையளிப்பதற்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற வேளை - கட்டைப் பறிச்சான் இராணுவ சோதனைச்சாவடியில் நான்கு மணிநேரம் தடுத்து வைத்த பின்னர் படையினர் திருப்பி அனுப்பினர்.

நேற்று முன்தினம் பூநகர் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் காவலரண் மீது இராணுவச் சீருடையினர் நடத்திய தாக்குதலில் படுகாயமடைந்த துணைப் படைவீரருக்கு ஈச்சிலம்பள்ளியிலுள்ள திலீபன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை யளிக்கப்பட்டுவந்தது.

எனினும் இவரது உடல்நிலை ஆபத்தான நிலையில் இருப்பதனால் வன்னியில் சிகிச்சையளிப்பதற்காக வழித்துணை

(12 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



தமிழருக்கு வேட்டு வைக்கத்தானே இந்தியாவோட கூட்டுவைக்கப் பாக்கினம்....!

### புதுவருட தினத்தை கழிக்க

# ஜனாதிபதி சந்திரிகா இங்கிலாந்து பயணம்!



(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா புதுவருட தினத்தை முன்னிட்டு தனிப்பட்ட விஜயமாக நேற்று பிரிட்டனுக் குப் புறப்பட்டுச் சென்றுள்ளதாகவும், இவர் எதிர் வரும் 18 ஆம் திகதியே நாடு திரும்புவாரெனவும் ஜனாதிபதி மாளிகைத் தகவல்கள் தெரிவித்தன.

ஜனாதிபதியின் இந்தப் பயணத்தை அடுத்து அடுத்தவாரம் நடைபெறவிருந்த அமைச்சரவைக் கூட்டம் இடம்பெறமாட்டாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி நாடு திரும்பும்வரை பதில் பாதுகாப்பு அமைச்சராக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவும், பதில் கல்வி அமைச்சராக தினேஷ் குணவர்த்தனவும் நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

(தே)

# பரிசுத்த பாப்பரசருக்கு யாழில் அஞ்சலி நிகழ்வு

கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத் தலைவர் பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் மறைவையொட்டி யாழ். மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலியும் அஞ்சலிக் கூட்டமும் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை தலைமையில் நேற்று காலை 9.30 மணிக்கு இடம் பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக திருத்தந்தையின் படங்கள் பவனியாக பீடத்தை நோக்கி எடுத்து வரப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

திருப்பலியின் பின் திருத்தந்தையின் படத்திற்கு யாழ். ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை மலர் மாலை அணிவித்து தீபமேற்றினார்.

அருட்தந்தை சி.எஸ்.குருஸ், அருட்சகோதரி சிந்தியா, ஏனைய கிறிஸ்தவ சபைகள் சார்பாக போதகர் கதிர் காமர், இந்து சகோதரர் சார்பாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ், பௌத்த சகோதரர் சார்பாக யாழ்.நாக விகாரை தேரரும் தீபமேற்றி மலர் அஞ்சலி செலுத்தினர்.

அனைத்து பங்குமக்கள் சார்பாக இறைமக்கள் மலர் அஞ்சலி செய்தார்கள். இதனைத் தொடர்ந்து பொது நிலையினர் சார்பாக ஏ.எஸ் அகஸ்ரின், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். நாக விகாரை தேரர் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள்.

இந்த நிகழ்விற்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், மத குருமார்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் துறையினர், பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள், கல்விச் சமூகத்தினர், பங்கு மக் கள் என பலர் அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டனர்.


தமிழீழ தேசிய தொலைக்காட்சிக்கான

ஆளணி வேண்டுகைகள்

தமிழீழ தேசிய தொலைக்காட்சி சேவையில் பணிபுரிவதற்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

- செய்தி வாசிப்பாளர்
- நிகழ்ச்சி அறிவிப்பாளர்
- நிகழ்ச்சித் தயாரிப்பாளர்
- நிகழ்ச்சித் தொகுப்பாளர்

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

தகைமைகளுக்கு அமைய கொடுப்பனவு வழங்கப்படும்

விண்ணப்பங்களை :
விளம்பர இல :37
'நமது ஈழநாடு'
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு 15.04.2005 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.

நிர்வாகி, தமிழீழ தேசிய தொலைக்காட்சி.



இப்பொழுது இலங்கையில்

அக்யூரேட் – 007
ஜாக்குவார் – 009



சாரங்கள்
பெனியன்கள்
உள்ளாடைகள்
கைக்குட்டைகள்

Lungies (Sarongs)
Vests
Briefs
Kerchiefs

Direct
Importers
Wholesalers
& Retailers

SOLE DISTRIBUTORS

OCEANICK IMPEX
192, Main Street, Colombo-11.
Tel : 2336720, 2327168 Wholesale : 2384131
Fax : 2326961 E-mail : oceanick192@yahoo.com


# க.பொ.த சா/தர பரீட்சை பெறுபேறுகள்

கடந்த புதனன்று வெளியான கல்விப் பொதுத்தராதர பத்திர சாதாரணதர பரீட்சையில் யாழ்ப்பாண மாவட்ட முன்னணி பாடசாலைகளின் சிறந்த பெறுபேறுகள் மேலும் சில

### சென். பற்றிக்ஸ் கல்லூரி

| | | | | |
|---|---|---|---|---|
| எஸ்.சிறிஹரிபாலா | 9A | B | | |
| ஏ.ஜி.பிறிற்றோ | 8A | B | C | |
| யு.தயாஸ்கரன் | 8A | 2B | | |
| ஜே.ஜே.நிருசன் | 8A | B | C | |
| ஏ.ஜே.டனிசியஸ் | 8A | | C | |
| என.திபறியாஸ் | 7A | B | 2C | |
| எம்.பி.விமல்ராஜ் | 7A | 2B | C | |
| கே.ஆரூரன் | 7A | | C | S |
| ஆர்.ராஜ்றெனூசியஸ் | 7A | 2B | | S |
| ஏ.அன்றூ நிரோசன் | 7A | 2B | C | |
| ஏ.ஏ.பிரான்சிஸ் | 6A | B | 2C | |
| ஜே.அஜந்தன் | 6A | B | 3C | |
| எஸ்.அஜந்தன் | 6A | 2B | 2C | |
| பி.றெக்னோ | 5A | 3B | 2C | |
| எம்.எவ்.சில்வின் | 5A | 4B | | S |
| எவ்.எம்.பிரதீபராஜ் | 5A | | 4C | S |
| ஏ.ஏ.பி.அனக்கிளிற் | 5A | | 4C | S |
| எப்.எல்.எமர்சன் | 5A | 3B | C | |
| வி.ஏ.பிரோன் | 5A | 4B | C | |
| ஜே.ஆர்.நொபேட்சன் | 5A | 3B | C | |
| ஆர்.நிக்ஸன் | 5A | | 3C | S |

### காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தி

| | | | | |
|---|---|---|---|---|
| பே.புஸ்பராசா | 7A | | 2C | S |
| த.சிவகரன் | 6A | B | 2C | S |
| வி.மயூரதன் | 5A | 2B | 3C | |
| சி.ஐங்கரன் | 5A | 3B | C | S |

| | | | | |
|---|---|---|---|---|
| மா.சுபாகரன் | 4A | 4B | C | S |
| அ.திருச்செந்தூரன் | 4A | 2B | 3C | S |
| நி.நித்தியா | 4A | 2B | 3C | S |
| சி.சிவப்பிரியா | 4A | 2B | 3C | S |
| ச.வசந்தகுமாரி | 4A | 2B | 2C | 2S |
| த.சரண்ராஜ் | 4A | B | 3C | 2S |
| ஆ.சிறிசண்முகராசா | 3A | 6B | | |
| சு.சுகந்தராசா | 3A | 2B | 5C | |
| க.கஜந்தினி | 3A | 2B | 3C | 2S |
| பா.குபேரதி | 3A | B | 4C | 2S |
| து.ரவிசாந்தி | 3A | B | 4C | S |
| சா.சரிதா | 3A | B | 4C | 2S |

### மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

| | | | | |
|---|---|---|---|---|
| எஸ்.றொசானி | 5A | 2B | 3C | |
| என்.கௌசல்யா | 5A | 2B | 3C | |
| ஜே.வைஷ்ணவி | 5A | 2B | 2C | S |
| என்.கோபினா | 5A | B | 3C | S |
| ரி.றெமினா | 4A | 3B | 2C | S |
| எஸ்.நிரோஜனி | 4A | | C | 4S |

### மானிப்பாய் சென்.ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை

| | | | | |
|---|---|---|---|---|
| ஜே.மேரி றொசிற்றா | 4A | 2B | 3C | S |
| ரீ.ஆன் சர்மிளா | 3A | 3B | 2C | 2S |
| எஸ்.இந்துகா | 3A | | 4C | 2S |

### சுதுமலை சிற்மய பாரதி வித்தியாலயம்

| | | | | |
|---|---|---|---|---|
| ரி.தர்மி | 9A | | C | |
| ஏ.றேக்கா | 3A | 4B | 2C | S |
| ரி.துசாந்தி | 3A | B | 3C | 3S |
| எஸ்.நிரோஜினி | 2A | 2B | 4C | S |
| எஸ்.பரமானந்தம் | 2A | 2B | 3C | 2S |

## பங்குனித் திங்கள் உற்சவம்

தெல்லிப்பளை வீணியவரை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் பங்குனித் திங்கள் உற்சவம் நாளை காலை 9 மணிக்கு அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாகவுள்ளது. ஆலயத்தில் நடைபெறும் பொங்கல் குளிர்த்தி நிகழ்வுகளில் காலை 8 மணிமுதல் மாலை 3 மணிவரை பக்தர்கள் சென்றுவருவதற்குப் படையினர் அனுமதி அளித்துள்ளனர்.

## நூல் வெளியீட்டு விழா

தென்புலோலியூர் ஆ.ச.க. சுப்பிரமணியம் எழுதிய திருத்தொண்டர் புராண வசனமும், இரண்டாம் சைவ வினா விடையும், திருவாதவூரர் புராண ஆய்வுரை ஆகிய மூன்று நூல்களின் வெளியீட்டு விழா இன்று முற்பகல் 8.30 மணிக்கு புற்றளை மகாவித்தியாலய மண்டபத்தில் ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் சே.ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.(14)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கந்த உடையார் வளவு ஞான வைரவர் ஆலய மகா கும்பாபிஷேக பெருவிழா இன்று காலை 8 மணிக்கு சு.து.சண்முகநாதக் குருக்களின் ஆசியுரையுடன் ஆரம்பமாகவுள்ளன.

## காமாட்சி அம்பாள் ஆலய மண்டலாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி காமாட்சி அம்பாள் ஆலயத்தின் 12 ஆம் நாள் மண்டலாபிஷேகம் இன்று காலை 10 மணிக்கு அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து விசேட பூசைகள் நடைபெறவுள்ளன.

நண்பகல் 12 மணிக்கு அன்னதான நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

நீர்வேலி வாய்க்கால்தரவை பிள்ளையார் ஆலய பிரதமகுரு ஆ.சந்திர சேகர குருக்கள் தலைமையில் 'நவ சக்தி ஹோமம்' நூல் வெளியீட்டு விழாவும் இடம்பெறவுள்ளது.

வெளியீட்டுரையை பிரம்மஸ்ரீ. ப.சிவானந்த சர்மா நிகழ்த்துவார். மதிப்புரையை யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறையை சேர்ந்த பிரம்மஸ்ரீ.ப.கோபாலகிருஷ்ண ஐயர் நிகழ்த்துவார்.


நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

இன்றுமுதல் அஜித், திரிசா நடித்த ஜி தினசரி 11.00, 3.00, 7.00 பு.நே.

புதுவருட அதிரடி வெளியீடாக பல வருடங்களுக்குப் பின்பு சூப்பர்ஸ்ராரின் மீண்டும் ஒரு புதிய படைப்பான

ஆசன முற்பதிவுகளுக்கு இன்றுமுதல்
நாகம்ஸ் பாட்டா
இல.10, நவீன சந்தை
சுன்னாகம்.
யாழ். பெயின் காடின்
கே.கே.எஸ் வீதி



சந்திரமுகி

(C/3979)



மனோகரா திரையரங்கு யாழ்ப்பாணம்

பார்த்திபன், காவேரி, மாஸ்ரர் அஸ்வின் மற்றும் பலர் நடித்த கண்ணாடிப் பூக்கள் கா.நே:10.30, 2.30 (பு.நே)

தனுஷ், ஸ்ரீதேவி, கருணாஸ் நடித்த தேவதையைக் கண்டேன் கா.நே: 6.30, 9.30 (பு.நே)

சித்திரைப் புத்தாண்டு வெளியீடாக
இளைய தளபதி விஜய்,
போய்ஸ் புகழ் ஹரிணி,
வடிவேல் நடித்த



சச்சின்

இன்றுமுதல் ரிக்கெட் முற்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.





ஊர்காவற்றுறை புளியங்கூடல் செருத்தனைப்பதி

ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தானம்

திருக்குளிர்த்தி விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

நிகழும் தாரண வருஷம் பங்குனி மாதம் 29ஆம் நாள் (11.04.2005) திங்கட்கிழமை காலை விஷேட சங்காபிஷேகம், விஷேட திரவியாபிஷேகம், விஷேட தீபாராதனை, திருக்குளிர்த்தி ஆகியன நடைபெறும். அத்தருணம் அடியார்கள் அனைவரும் வருகை தந்து அம்பிகையின் அருள்பெற்றேகுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

சுபம்

செருத்தனைப்பதி,
புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை

(1118)



நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜய், ரவிகிருஸ்ணா, நதீஷா நடித்த

சுக்ரன்

கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

(சி-3976)



ராஜா யாழ்ப்பாணம்

இன்று மட்டும்
கருணாஸ், ரிச்சா, தலைவாசல் விஜய் மற்றும் பலர் நடித்த
கையோடு கை

14 முதல்
இந்திய, இலங்கை ஒரேதின வெளியீடு
கமலஹாசன், மனிசா கொய்ராலா நடித்த
மும்பை எக்ஸ்பிரஸ்

(சி-3980) பு.நே: 10.30, 2.30, 6.30,



நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

குளிரூட்டப்பட்டது

தாவடி மைந்தன்
ஜெய் ஆகாஷ், பிரணதி,
நாசர், தாமு, வையாபுரி நடித்த



குருதேவா

கா.நே(பு.நே) ▷ 10.30, 2.30, 6.30, 9.30 (சி-3977)

# இலங்கையின் சமாதானத்துக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார்!

## சீனப் பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சமாதானம் மற்றும் அதன் ஸ்திரத்தன்மை என்பன குறித்து சீன அரசாங்கம் தொடர்ந்தும் தனது கடப்பாட்டை நிறைவேற்றிவருவதாக சீனப் பிரதமர் வென்ஜியாபோ தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவை ஜனாதிபதி மாளிகையில் நேற்றுமுன்தினம் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிராந்திய மற்றும் உலகமயப்படுத்தல் ஆகிய விடயங்களில் சீனா தனது ஒத்துழைப்பை வழங்கி வருவதாகவும், இலங்கையில் இயற்கை அனர்த்தங்களைத் தவிர்த்துக்கொள்ளும் வகையில் தேவையான தொழில்நுட்பம் மற்றும் பயிற்சிகளை வழங்குவதற்கான வசதிகளைச் செய்துகொடுப்பதற்கும் இந்தச் சந்திப்பின்போது அவர் இணங்கியுள்ளதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் வர்த்தகத்துறை சார்ந்த விடயங்களில் தோன்றும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், கலைத்துறைக்கு தேசிய மத்திய நிலையம் ஒன்றை அமைத்துக் கொடுப்பதற்கும் சீனப் பிரதமர் உறுதி வழங்கியுள்ளார்.

சீனாவுக்கும் - இலங்கைக்கும் இடையில் எதிர்காலத்தில் நிரந்தர உறவுகளை வைத்துக்கொள்ளும் வகையில், சகலதுறை சார்ந்த ஒத்துழைப்பையும் கவனத்தில்கொண்டு செயற்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை - இரு நாடுகளுக்கும் இடையில் சமய மற்றும் கலாசார உறவுகளின்மூலம் நவயுகம் ஒன்றை உருவாக்கமுடியும் என சீனப் பிரதமரிடம் ஜனாதிபதி தெரிவித்ததாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுனாமி கடல் அனர்த்தத்தின் போது மனிதாபிமான உதவிகளையும், புனருத்தாரண நடவடிக்கைகளுக்கான உதவிகளையும் சீன அரசாங்கமும் - அந்த நாட்டு மக்களும் வழங்கியமைக்கு ஜனாதிபதி சந்திரிகா தனது நன்றியைத் தெரிவித்தார்.

இலங்கைக்கு வழங்கியுள்ள கடன்களுக்கு விடுப்பு வழங்க சீனா இணங்கியுள்ளமையையும், பல்வேறு கைத்தொழில் மற்றும் பொருளாதார அபிவிருத்திகளுக்கு அந்தநாடு வழங்கி வரும் ஒத்துழைப்புகளும் இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு வழிவகுக்கும் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

# அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது தொடர்பாக நாடாளுமன்றத்தில் புதிய சட்ட வரைபு!

(கொழும்பு)

அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும்போது, அந்த நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தப்படாத விதத்தில் சட்டங்களைத் திருத்துவதற்கு நாடாளுமன்றத்தில் சட்டவரைபு கொண்டுவருவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான தீர்மானம் கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. இந்தச் சட்டவரைபு தயாரிக்கப்பட்டு அமைச்சரவை அனுமதிக்காக விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

பொதுமக்களோடு நேரடியாகத் தொடர்புபடும் அரசின் அனைத்து நிறுவனங்களையும் பாதுகாக்கும் விதமாக இந்தச் சட்டவரைபு தயாரிக்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொள்கைகளுக்கிணங்க அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும்போது எந்தக் காரணம் கொண்டும் தனியார் மயப்படுத்தப்படுவதில்லை என -

மின்சக்தி எரிபொருள் அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்தவுக்கும் மற்றும் ஜே.வி.பிக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஏற்கனவே உடன்பாடு எட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உயர்ந்த தரத்துடன் கல்விமுறையை நிறுவுவதற்கு கொள்கை வகுப்பாளர்கள் கவனம் செலுத்தவேண்டும்

## உலக வங்கி அறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் உயர்ந்த தரத்துடன் கூடிய சிறந்த கல்விமுறையை நிறுவுவது தொடர்பாகக் கொள்கை வகுப்பாளர்கள் கவனம் செலுத்த வேண்டுமென உலக வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கையின் கல்வித்துறை குறித்து உலக வங்கி நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உலக வங்கி மேலும் தெரிவித்துள்ளதாவது -

ஆரம்பக்கல்வி பயிலும் சிறுவர், சிறுமியரைக் குறித்த காலப்பகுதியில் முழுமையாகப் பாடசாலையில் தங்க வைப்பது, பாடப் புத்தகங்களின் தரங்களை மேம்படுத்துவது போன்ற விடயங்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்படவேண்டும்.

கல்வித் துறையின் மேம்பாட்டுக்காகத் தனியார் துறையின் பங்களிப்பைக் கூடுதலாகப் பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

அவ்வாறே ஆசிரியர்களின் தொழிற்பயிற்சி ஆற்றலை அபிவிருத்தி செய்வது தொடர்பான கொள்கைகளை வகுப்பது குறித்தும் கவனம் செலுத்தப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுனாமி நிதியுதவி வழங்கல் தொடர்பாக உலக வங்கி கணக்காய்வை ஆரம்பித்தது

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிதியுதவி வழங்கல் தொடர்பாக உலகவங்கி கணக்காய்வை ஆரம்பித்துள்ளது.

சுனாமி அனர்த்தங்களுக்குள்ளான ஒரு லட்சம் குடும்பங்களில் - ஒரு குடும்பத்துக்கு மாதமொன்றுக்கு 5 ஆயிரம் ரூபா வீதம் நான்கு மாதங்களுக்கு வழங்குவதற்கான நிதியை உலகவங்கி வழங்கியிருந்தபோதும் இந்தத் தொகை இரண்டு லட்சம் குடும்பங்களுக்கு வழங்கியதனால் நான்கு மாதங்களுக்கென வழங்கப்பட்ட தொகை இரண்டு மாதங்களுடன் முடிவடைந்தது.

உலக வங்கியின் மதிப்பீட்டிற்கு மாறாக இந்த நிதி வழங்கியதனால் முறைகேடுகள் நிகழ்ந்துள்ளனவா என்பதைக் கண்டறியவே இந்தக் கணக்காய்வை உலகவங்கி நடத்தவுள்ளது.

உண்மையாகவே அனர்த்தங்களுக்குள்ளான குடும்பங்களுக்கு மேலதிகமாக உதவிகள் பெறுவதற்கு தகுதிகள் இல்லாதவர்களுக்கும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளனவா எனவும் இந்தக் கணக்காய்வின்போது கண்டறியப்படவுள்ளது.

(தே)

# அமைச்சுப் பதவி குறித்து சந்திரிகா-தொண்டமான் பேச்சு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தனக்குக் கிடைக்கவிருக்கும் அமைச்சுப் பதவி எப்போது கிடைக்கும் என்று தொண்டமான் ஜனாதிபதியிடம் விசாரித்ததாகவும், அடுத்த அமைச்சரவை மாற்றத்தின்போது தொண்டமானின் வேண்டுகோள் நிறைவேற்றப்படும் என்று ஜனாதிபதி தொண்டமானுக்குக் கூறியுள்ளதாகவும் தெரியவருகிறது.

இவருக்கு சிவில் விமானப் போக்குவரத்து மற்றும் நகர அபிவிருத்தியோடு தொடர்புடைய அமைச்சர் பதவி கிடைக்கலாம் என ஜனாதிபதி இதன்போது சமிக்ஞையை வெளியிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது எதிர்க்கட்சித் தரப்பில் நாடாளுமன்றில் அமர்ந்திருக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் அரச தரப்பில் வந்து அமர்ந்துகொள்ள வேண்டுமென்று ஜனாதிபதி - தொண்டமானிடம் கேட்டுக் கொண்டார் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்பொழுது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அமைச்சரும், பிரதியமைச்சரும் மாத்திரமே அரச தரப்பில் அமர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (தே)

# 4500 சிசுக்கள் வருடாந்தம் மரணம்

(கொழும்பு)

இலங்கையில் வருடமொன்றுக்கு கர்ப்பிணித் தாய்மார் 200 பேரும், 4500 சிசுக்களும் மரணமடைவதாக - சுகாதார அமைச்சில் பதில் கடமைபுரியும் செயலாளர் டொக்டர் நிகால் ஜயதிலக தெரிவித்துள்ளார். கடந்த வியாழக்கிழமை கொழும்பில் மகாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற விழாவில் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் வருடமொன்றுக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் பெண்கள் கர்ப்பம் அடைகின்றனர். இதனால் வருடாந்தம் பிள்ளைகளின் பிறப்பு வீதம் 3 லட்சத்து 45 ஆயிரமாக உள்ளது.

இலங்கையில் தாய்மார்களின் இறப்பு விகிதம் லட்சத்துக்கு 50 என்றும் - குழந்தைகளின் மரண வீதம் ஆயிரத்துக்கு பதின்மூன்றுமாக உள்ளது என்றும் குறிப்பிட்டார். (தே)

## சுனாமி மீள்கட்டமைப்பு கணிசமாக நிறைவேறியதாம்

### நிதியமைச்சர் சொல்கிறார்

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு மூன்றுமாத காலத்தினுள் அரசாங்கம் கணிசமான அளவு வேலைத்திட்டங்களை நிறைவேற்றியுள்ளதாக நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டைக் கட்டியெழுப்பும் முயற்சிகள் எவ்வித ஒளிவுமறைவுமின்றி வெளிப்படையாக இடம்பெற்றுவருகின்றன. சுனாமி அனர்த்தத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள சேதங்களுக்கு மேலதிகமாகத் தேவைப்படும் உதவிகள் குறித்து வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் மாநாடு எதிர்வரும் 15, 17 ஆம் திகதிகளில் கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டுக்கு முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் அழைக்கப்படவுள்ளதாகவும் நிதியமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# இந்தமாத முடிவுக்குள் பொதுக் கட்டமைப்பு உடன்பாடு

## ஜயந்த தனபால தெரிவிப்பு

(கொழும்பு)

அரசும், விடுதலைப் புலிகளும் இணைந்து அமைப்பதற்குத் தீர்மானித்துள்ள பொதுக் கட்டமைப்பு ஒப்பந்தத்தில் இந்த மாத முடிவுக்குள் கைச்சாத்திடக்கூடிய சாத்தியங்கள் உள்ளதாக - அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்ததாக கொழும்பிலிருந்து வெளிவரும் ராவய பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஜயந்த தனபாலவை மேற்கோள் காட்டி ராவய பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளதாவது -

பொதுக் கட்டமைப்பு உருவாக்கம் தொடர்பாக தற்போது சகல ஆரம்ப கட்ட நடவடிக்கைகளும் முடிவடைந்துள்ளன. இதுகுறித்து விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ முடிவு நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக விரைவில் அரசுக்கு கிடைக்கும்.

இதன்பின்னர் ஜனாதிபதி சந்திரிகா தீர்மானிக்கும் திகதியில் அரசும், விடுதலைப் புலிகளும் கைச்சாத்திடுவர் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(தே)

# பிரிவினைவாதத்துக்குச் சார்பாகச் செயற்படுவோரை தடைசெய்யுமாறு பிக்குகள் முன்னணி கோரிக்கை


(கொழும்பு)

பிரிவினைவாதத்துக்குச் சார்பாகச் செயற்படும் அரசசார்பற்ற நிறுவனங்களைத் தடைசெய்யுமாறு தேசிய பிக்குகள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்காகப் பொதுமக்களிடமிருந்து 30 ஆயிரம் கையெழுத்துச் சேகரித்த மகஜர் ஒன்றை ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.


பொதுமக்களிடம் கையெழுத்துச் சேகரிக்கும்போது, பொதுக்கட்டமைப்பு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றி - கிராமப்புறங்களிலுள்ள விகாரைகள் மூலம் மக்களுக்கு தேசிய பிக்குகள் முன்னணியினர் விளக்கமளித்து வருவதாகவும் தெரியவருகிறது.

(தே)



யாழ்.கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளையில் நேற்று மக்கள் வங்கியின் துணை நிறுவனமான பீப்பிள்ஸ் லீசிங் நிறுவனத்தின் திறப்பு விழாவில் - முக்கிய பிரமுகர்கள் அழைத்துவரப்படுவதையும், பீப்பிள்ஸ் லீசிங் கம்பனியின் பிரதம அதிகாரி டி.பி.குமாரகே மங்கள விளக்கேற்றுவதையும், மக்கள் வங்கி பதில் பொது முகாமையாளர் ரி. கருணாசேன உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# 106 ஓட்டங்களால் இந்தியாவை தோற்கடித்தது பாகிஸ்தான் அணி!



இந்திய அணிக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணி 106 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அப்ரிடியும், சல்மான் பட்டும் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினார்கள். தொடக்கத்தில் இருந்தே அவர்கள் அடித்து விளையாட ஆரம்பித்தனர்.

6ஆவது ஓவரில் தொடக்க ஜோடி பிரிந்தது. அப்ரிடி 17 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது, நெஹ்ராவின் பந்தில் ஆட்டமிழந்தார். அவர் அடித்த பந்தை முதல் ஸ்லிப் பகுதியில் நின்ற ராவிட் பிடியெடுத்தார். அப்போது ஸ்கோர் 31ஆக இருந்தது. 2ஆவது விக்கெட்டுக்கு சல்மான் பட்டுடன் சொகைப் மலிக் ஜோடி சேர்ந்தார்.

இந்த ஜோடி இந்திய பந்துவீச்சை பொறுமையுடன் எதிர்கொண்டது. நேரம் செல்லச் செல்ல இருவரும் அடித்து விளையாட ஆரம்பித்தனர். சல்மான் பட் 60 பந்துகளில் 50 ஓட்டங்களைத் தொட்டார். அவரைத் தொடர்ந்து சொகைப் மலிக் 65 பந்துகளில் 50 ஓட்டங்களைத் தொட்டார்.

25ஆவது ஓவருக்கு பின்பு சொகைப் மலிக் அதிரடி ஆட்டத்தில் ஈடுபட்டார். டெண்டுல்கரின் ஓவரில் 2 சிக்ஸர்களை அடித்து ஓட்டச் சராசரியை உயர்த்தினார். 31.2ஆவது ஓவரில் ஸ்கோர் 176ஆக இருந்தபோது இந்த ஜோடி பிரிந்தது. சொகைப் மலிக் 79 பந்துகளில் 7 பவுண்டரிகள், 2 சிக்ஸருடன் 75 ஓட்டங்களை எடுத்தபோது ஆட்டமிழந்தார். அவரது விக்கெட்டை ஷேவாக் கைப்பற்றினார். சல்மான் பட் - மலிக் ஜோடி 145 ஓட்டங்களை எடுத்தது ஆட்டத்தின் முக்கிய அம்சமாகும்.

அடுத்து கப்டன் இன்சமாம் களமிறங்கினார். அடித்து ஆடும் வேகத்தில் அவர் ஈடுபட்டார். அவர் 17 பந்துகளில் 23 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் இருந்த சல்மான் பட் மிகவும் சிறப்பாக ஆடி சதமடித்தார். 114 பந்துகளில் 10 பவுண்டரிகளுடன் 100 ஓட்டங்களைத் தொட்டார். ஒருநாள் போட்டியில் அவரது 2ஆவது சதம் இதுவாகும். இந்தியாவுக்கு எதிராக 2ஆவது சதமாகும். 101 ஓட்டங்களை எடுத்து அவர் பவிலியன் திரும்பினார்.

40ஆவது ஓவருக்குப் பின் பாகிஸ்தான் அதிரடி ஆட்டத்தில் ஈடுபட்டது. யுகானா அதிரடியாக ஆடினார். 31 பந்துகளில் 43 ஓட்டங்களை எடுத்திருந்தபோது அவர் ஆட்டமிழந்தார். இதேபோல ரசாக்கும் சிறப்பாக ஆடினார்.

47.3ஆவது ஓவரில் பாகிஸ்தான் அணி 300 ஓட்டங்களைத் தொட்டது. கடைசி நேரத்தில் விக்கெட்டுக்கள் விழுந்ததால் ஓட்டங்கள் சிறிது கட்டுப்படுத் தப்பட்டது.

பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 319 ஓட்டங்களைக் குவித்தது. இந்தியத் தரப்பில் நெஹ்ரா 3 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

320 ஓட்டங்களை எடுத்தால், வெற்றிபெறலாமென்ற கடினமான இலக்குடன் இந்திய அணி துடுப்பெடுத்தாட தொடக்க வீரர்களாக ஷேவாக்கும், டெண்டுல்கரும் களமிறங்கினார்கள்.



6 ஓவரில் 20 ஓட்டங்களை எடுப்பதற்குள் 3 விக்கெட்டுக்களை இழந்து இந்தியா பரிதாபநிலையில் இருந்தது.

ஷேவாக் 2 ஓட்டங்களிலும், டெண்டுல்கர் 6 ஓட்டங்களிலும், கப்டன் கங்கூலி 4 ஓட்டங்களிலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். அவர்களது மோசமான ஆட்டம் ரசிகர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.



அடுத்து டோனி 28 ஓட்டங்களிலும், யுவராஜ் சிங் 1 ஓட்டத்திலும் நவீட்-உல்-ஹசனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர். இதனால் இந்தியா 66 ஓட்டங்களுக்குள் 5 விக்கெட்டுக்களை இழந்தது. நவீட்-உல்-ஹசன் சிறப்பாகப் பந்துவீசி 4 விக்கெட்டுக்களை எடுத்திருந்தார். அடுத்து சிறிது நேரத்தில் 28 ஓட்டங்கள் எடுத்திருந்த ராவிட் சமியின் பந்துவீச்சில் யுனுஸ் கானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதனால் இந்தியா 16.1 ஓவரில் 82 ஓட்டங்கள் எடுத்திருந்தநிலையில் 6 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.


அடுத்து கைவ்வுடன், பதான் ஜோடி சேர்ந்தார். பதான் சிறப்பாக ஆடி இந்திய அணியின் ஸ்கோரை வேகமாக உயர்த்தி கௌரவமான நிலைக்குக் கொண்டுசென்றார். இருவரும் சிக்ஸர்களும், பவுண்டரிகளுமாக விளாசினார்கள்.

இந்தநிலையில் 143 ஓட்டங்களாக இருக்கும்போது கைவ் 32 ஓட்டங்களில் கனேரியாவின் பந்தில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து ஹர்பஜன் சிங் களமிறங்கினார். இவர் 2 ஓட்டங்களில் சொகைப் மலிக்கின் பந்தில் போல்டாகி வெளியேறினார்.

அடுத்து சகீர்கான் களமிறங்கினார். இரண்டுபேரும் அதிரடியாக விளையாடி 9ஆவது விக்கெட்டுக்கு 52 ஓட்டங்களைச் சேர்த்தனர். சிறப்பாக விளையாடிய பதான் அரைச்சதமடித்தார்.

இந்திய அணியின் ஸ்கோர் 204ஆக இருக்கும்போது பதான், நவீட்-உல்-ஹசனின் பந்தில் ஆட்டமிழந்தார். இவர் 80 பந்துகளில் 2 பவுண்டரிகள், 4 சிக்ஸர்களுடன் 64 ஓட்டங்களை எடுத்திருந்தார். அடுத்து களமிறங்கிய நெஹ்ரா 3 ஓட்டங்களில் நவீட்-உல்-ஹசனின் பந்தில் போல்டானார். இதனால் இந்தியா 213 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 106 ஓட்டங்களால் தோல்வியைச் சந்தித்தது.

சகீர்கான் 27 ஓட்டங்களுடன் ஆட்ட



மிழக்காமல் இருந்தார். பாகிஸ்தான் தரப்பில் நவீட்-உல்-ஹசன் சிறப்பாகப் பந்துவீசி 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். அவரே ஆட்டநாயகனாகவும் தெரிவானார்.

## உதைபந்தாட்டப் போட்டி

எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்தமாக சுனாமி தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்டப் பிரிவினரின் ஆதரவுடன் வலிகாம உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்தத் தொடரின் இன்றைய காலிறுதிப் போட்டிகளில் மாலை 4 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் வட்டக்கச்சி லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகமும், மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள மற்றைய ஆட்டத்தில் பல்கலைக்கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. இந்தப் போட்டிகள் நேற்று நடைபெறுவதாக இருந்தபோதிலும் தவிர்க்கமுடியாத காரணத்தால் நடைபெறவில்லை.

## கிரிக்கெட் போட்டி

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடத்தப்படும் நான்குமுனை கிரிக்கெட் போட்டியில் இன்று காலை 8.30 மணிக்கு - யங் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பற்றீசியன் கழக அணியும்,

பிற்பகல் 1 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பல்கலைக்கழக அணியும் மோதவுள்ளன.

இந்த ஆட்டங்கள் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (58)

## சுதேசியத் திருநாளுக்கான விளையாட்டுப் போட்டிகள்

அரியாலையில் 86ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டங்களை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வின் முதல்நிகழ்வாக காலை 6.30 மணிக்கு ஆண்கள், பெண்களுக்கான 5 மைல் மரதன் ஓட்டமும், இருபாலாருக்குமான சைக்கிளோட்டப் போட்டியும் நடைபெறவுள்ளன.

அதேவேளை, 16 வயதுக்குட்பட்ட உள்ளூர் வீரர்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டி காலை 9 மணிக்கு அரியாலை சனசமூக நிலைய ஆடுகளத்தில் நடைபெறவுள்ளது. இதில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய ஏ அணியை எதிர்த்து அரியாலை சனசமூக நிலைய பி அணி மோதவுள்ளது.

இன்று நடைபெறவுள்ள மற்றைய ஆட்டத்தில் மாவட்ட ரீதியாக நடத்தப்பட்டுவந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் 4ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து 11ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோதவுள்ள ஆட்டம், அரியாலை சனசமூகநிலைய ஆடுகளத்தில் காலை 10.50 மணிக்கு நடைபெறவுள்ளது.

திறந்த போட்டியாக யாழ்.மாவட்டத் திணைக்களங்களுக்கிடையில் நடத்தப்பட்டுவந்த உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.மாநகரசபை விளையாட்டு அணியை எதிர்த்து விளையாட்டு அலுவலர்கள் அணி மோதவுள்ளது.

இதேவேளை மாலை 7.30 மணிக்கு மின்னொளியில் இடம்பெறவுள்ள கரப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

## மகளிர் உலகக்கிண்ண கிரிக்கெட் இந்திய - அவுஸ்ரேலிய அணிகள் இறுதிப் போட்டியில் இன்று மோதல்



உலகக்கிண்ண மகளிர் கிரிக்கெட்டில் இந்திய அணி முதல்முறையாக இன்று நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் வலிமைமிக்க அவுஸ்ரேலிய அணியுடன் மோதவுள்ளது.

தென்னாபிரிக்காவில் நடைபெறும் 5ஆவது பெண்கள் உலகக் கிண்ணப்போட்டியில் முதலாவது அரையிறுதியில் அவுஸ்ரேலிய அணி இங்கிலாந்தை வென்றது. இரண்டாவது அரையிறுதியில் இந்திய அணி நியூஸிலாந்தை வீழ்த்தி முதல் முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இன்று நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் இந்திய அணி, அவுஸ்ரேலியாவுடன் மோதவுள்ளது. சமீபத்தில் நடந்த ஒருநாள் தொடரில் அவுஸ்ரேலிய அணி இந்தியாவை 4-3 என்ற கணக்கில் வென்றது. இந்தத் தொடரில் இந்திய வீராங்கனைகள் கடும்போட்டியைக் கொடுத்தனர். இதனால் உலகக்கிண்ண இறுதிப் போட்டியிலும் இந்திய அணி சாதிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து அவுஸ்ரேலிய பயிற்சியாளர் ஸ்டீவ் ஜென்கின் கூறுகையில்-

கடந்த நான்கு ஆண்டுகளில் இந்தியாவிடம்தான் அதிகமுறை தோற்றுள்ளோம். வீராங்கனைகள் அனைவரும் நல்ல உடற்தகுதியுடன் காணப்படுகின்றனர். இறுதிப் போட்டியில் கடும் போட்டியை எதிர்பார்க்கலாம் என்றார்.

இறுதிப் போட்டியில் காயத்தையும் பொருட்படுத்தாது பங்கேற்கப் போவதாக சபதம் செய்துள்ளார் இந்திய கப்டன் மிதாலிராஜ். நியூஸிலாந்துக்கு எதிரான அரையிறுதியில் இவர் 91 ஓட்டங்களை விளாசி அணிக்கு வெற்றி தேடித்தந்தார். இந்தப் போட்டியின்போது மிதாலிக்கு முழங்கால் பகுதியில் காயம் ஏற்பட, இறுதிப் போட்டியில் பங்கேற்பாரா என்ற



சந்தேகம் எழுந்தது.

இது பற்றி அவர் கூறுகையில் -

நீண்டநாள் கனவு இப்போதுதான் நனவாகியுள்ளது. உடற்தகுதி இல்லாமல்போனால்கூட இறுதிப் போட்டியில் நிச்சயமாகப் பங்கேற்பேன். அவுஸ்ரேலியாவுக்கு எதிரான சவாலுக்குத் தயாராகவுள்ளோம்.

இந்திய சுழற்பந்து வீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்படுகின்றனர். எந்தக் களத்திலும் பந்தைச் சுழற்றும் ஆற்றல் படைத்த இவர்கள் இறுதிப் போட்டியிலும் சாதிப்பார்களென மிதாலி நம்பிக்கை தெரிவித்தார்.

## தென்னாபிரிக்காவுக்கு எதிராக லாரா 159 ஓட்டங்கள் குவிப்பு!

(ரினிடாட்)

தென்னாபிரிக்க அணிக்கு எதிராக ரினிடாட்டில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் - பிறைன் லாராவின் அபாரமான ஆட்டத்தின் மூலம் - மேற்கிந்தியத் தீவுகள் அணி 6 விக்கெட் இழப்புக்கு 281 ஓட்டங்களை எடுத்தது.

விளம்பர ஒப்பந்த சர்ச்சையால் அணியிலிருந்து நீக்கப்பட்ட லாரா நேற்றுமுன்தினம் ஆரம்பமான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஆடினார்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி, முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது.

வெவல் ஹைன்ட்ஸ் - கைல் ஜோடி முதலில் களமிறங்கியது.

எனினும் நின்றுபிடித்து ஆட்டத்தைத் தொடரமுன்னரே அடுத்தடுத்து இரண்டு விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டன. ஸ்கோர் 7ஆக இருந்தபோது - 6 ஓட்டங்களைப்பெற்றிருந்த கைலும், ஸ்கோர் 13ஆக இருந்தபோது 5 ஓட்டங்களைப் பெற்ற சர்வானும் என்ரினியின் பந்துவீச்சுக்கு விக்கெட்டைப் பறிகொடுத்தனர்.

அடுத்து ஹைன்ட்ஸுடன் லாரா இணைந்துகொண்டார். மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சோர்வை நீக்கும் வகையில் இவர்கள் இருவரும் ஆடி ஓட்டங்களைக் குவித்தனர்.

இதனால் அணியின் ஸ்கோர் உயர்ந்தது. ஸ்கோர் 108ஐஎட்டிய போது - மூன்றாவது விக்கெட்டாக - ஹைன்ட்ஸையும் வீழ்த்தினார் என்ரினி.


ஹைன்ட்ஸ் 110 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 32 ஓட்டங்களை எடுத்தார். இவரையடுத்து அணித் தலைவர் சந்தர்போல் களமிறங்கினார்.

லாரா - சந்தர்போல் ஜோடி நிலைத்துநின்று ஆடி ஓட்டங்களை எடுத்தது. இவர்கள் இருவரும் இணைந்து அணியின் ஸ்கோரை 203ஆக உயர்த்தினர்.

இந்தநிலையில் சந்தர்போல் 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அவர் 70 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டங்களை எடுத்தார்.

இதன்பின்னர் களமிறங்கிய பகொன் ஓட்டமெதையும் பெறாத நிலையிலும், பிராவோ 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இதையடுத்து லாராவுடன் பிறெளன் இணைந்து கொண்டார்.

87 ஓவர்கள் நிறைவில் - முதல் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டபோது - மேற்கிந்தியத் தீவுகள் அணி 6 விக்கெட் இழப்புக்கு 281 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்தது.



லாரா 159 ஓட்டங்களுடனும், பிறெளன் 19 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். லாரா 236 பந்துகளில் 20 பவுண்டரிகளுடன் 159 ஓட்டங்களை எடுத்தார். இவர் தனது 27ஆவது சதத்தை அடித்ததன் மூலம் டெஸ்ட் போட்டிகளில் - சோபர்ஸ் பெற்ற 26 சதங்கள் என்ற சாதனையை முறியடித்தார்.

## வெள்ள நிவாரணம் வழங்கல்

(சுதுமலை)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வெள்ள நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளை சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நஷ்ட ஈட்டுப் பத்திரங்கள் - கிராம அலுவலர்கள் மூலம் பூரணப்படுத்தப்பட்டுள்ளதாகவும், பாதிக்கப்பட்டவர்களுக்கான கொடுப்பனவு மிகவிரைவில் செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகிறது. (44)

## யாழ். பல்கலையில் திரைப்படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் 'புரூஸ் பெரெஸ் போட்' நெறியாள்கையில் உருவான Breker Morant எனும் ஆங்கிலத் திரைப்படம் - தமிழ்த் துணைத் தலைப்புகளுடன் இன்று காலை 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக் கப்படும்.

படக்காட்சியின் இறுதியில் வழமை போல் படம் பற்றிய கலந்துரை யாடல் ஒன்றும் இடம்பெறும். ஆர்வலர்கள் வருகைதந்து பயன்பெறலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# மாணவர்களின் போக்குவரத்தில் ஆசிரியர் கவனம் செலுத்தவேண்டும்!

## யாழ்.மேலதிக நீதிபதி அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் 13 வயதுக்குக் குறைந்த பாடசாலைமாணவர்கள் துவிச்சக்கரவண்டி ஓடுவதைத் தவிர்க்குமாறும், பாடசாலைகளில் உள்ள வகுப்பாசிரியர் ஒவ்வொருவரிடமும் தமது வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களின் போக்குவரத்து தொடர்பான தகவல் இருக்க வேண்டும் எனவும், யாழ். மேலதிக நீதிமன்ற நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் அறிவுறுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்.நீதிமன்றில் பாடசாலை அதிபர்கள், யாழ்.வலயக் கல்வி அதிகாரிகள், போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார், சிறுபிள்ளை, பெண்கள் பிரிவு பொலிஸ் அதிகாரி, ரெலிக்கொம் பிரதிநிதி, வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி ஆகியோரைச் சந்தித்து -

அண்மைக்காலமாக ஏற்படுகின்ற வீதிவிபத்துகள், பாலியல் வல்லுறவு சம்பவங்கள் தொடர்பாகக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒவ்வொருநாளும் பாடசாலைகளின் காலைப் பிரார்த்தனையின் போதும், பாடசாலை முடிவடையும் போதும், பாடம் கற்பிக்கும் ஆசிரியர் வீதிப்போக்குவரத்துத் தொடர்பாகவும், விபத்துக்களை தவிர்க்கும் வழிமுறைகளையும், வீதிகளில் மற்றையவர்களுடன் பண்பாடாக நடக்கும் முறை தொடர்பாகவும் கற்பிக்க வேண்டும்.

இதைவிட ஒவ்வொரு வகுப்பாசிரியரும் தனது வகுப்பில் உள்ள மாணவர்கள் எவ்வகையான போக்குவரத்து சாதனங்களைப் பயன்படுத்துகின்றனர், நடந்தா, துவிச்சக்கரவண்டியிலா, பதிவு செய்யப்பட்ட வாகனத்திலா, ஓட்டோவிலா பாடசாலைக்கு வருகின்றனர். என்பதை உறுதிப்படுத்தி, பதிவு செய்து கொள்ளவேண்டும்.

இதைவிட மாணவர்கள் பாடசாலை முடிந்து வேறு எங்கும் தங்கி நிற்காமல் நேரடியாகத் தமது வீட்டுக்குச் செல்கின்றார்களா என்பதிலும் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இயல்பு நிலைகளுக்கு மாறான நேரங்களில் மாணவர் பாதுகாப்பை உறுதிப்படுத்த, வேறுபாடசாலைகளுடன் தொடர்பு கொண்டு, சரியான முறையில் மாணவர்களை வீடு செல்ல அனுமதிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## மானிப்பாய் சந்தியில் புதிய காவலரண் அமைப்பு

(சுதுமலை)

மானிப்பாய் சந்தியில் இராணுவத்தினரின் புதிய காவலரண் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

மானிப்பாய் சந்தியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் வசிக்கும் இராணுவத்தினரே - கற்களைக் கொண்டு நிரந்தரமாக இந்தப் புதிய காவலரணை அமைத்து வருகின்றனர்.

யுத்த நிறுத்த காலத்தில் இப்படியான நிரந்தர காவலரண்களை இராணுவத்தினர் ஏன் அமைக்கின்றார்கள் என கேள்வி எழுப்பியுள்ளனர். (44)

## சுனாமி நிவாரண முத்திரை வழங்கல்

(சுதுமலை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சுனாமி கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண முத்திரைகள் உரிய கிராம அலுவலர்கள் ரீதியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

சுனாமி நிவாரண முத்திரைகளுக்கான கொடுப்பனவுகள் - சமுர்த்தி வங்கிகளினூடாக வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. (44)

## நெடுந்தீவு கடற்படை முகாமில் புதிய காவலரண்கள் அமைப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேசத்தில் கடற்படை முகாம் விஸ்தரிக்கப்பட்டு வருவதுடன், புதிய காவலரண்கள் அமைக்கப்பட்டு பலப்படுத்தப்பட்டும் வருகின்றமையால், மக்கள் மத்தியில் அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது.

நெடுந்தீவு பிரதம தபாலக வளாகத்தில் அமைந்துள்ள கடற்படை முகாமிலுள்ள பெரியளவிலான கொட்டகைகள் அமைக்கப்பட்டு வருவதுடன், அதனைச் சுற்றி முட்கம்பி வேலிகளும், காவலரண்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த முகாம்களுக்கு, பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளில் இருந்து பனைமரங்கள் தறிக்கப்பட்டே - கொட்டகைகளும், காவலரண்களும் அமைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (113)

## அதிபர்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது பொதுக் கல்வித் திட்டத்தின் கீழ் - நூலக அபிவிருத்திக்காகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான 'முகாமைத்துவமும், நூலக அபிவிருத்தியும்' என்ற தலைப்பிலான செயலமர்வு - நாளை முதல் மூன்று தினங்கள் தினமும் காலை 8.30 மணிமுதல் 4.30 மணிவரை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் அதிபர்கள், அல்லது கடமையை நிறைவேற்றும் அதிபர்கள் தவிர்ந்த எவரும் இந்தச் செயலமர்வில் கலந்துகொள்ள அனுமதிக்க முடியாதென மாகாண கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் தெரிவித்தார்.

## அதிகரித்த விலையில் மருந்துகள் விற்பனை

குடாநாட்டிலுள்ள சில மருந்தகங்களில் - மருந்துப் பொருட்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு விலையைவிட அதிகரித்த விலையில் மருந்துப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

பொதுமக்களில் பெரும்பாலானோர் தினமும் பாவிக்கும் மருந்து வகைகளே இவ்வாறு அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இந்த விடயம் தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும், தமிழீழ சுகாதார சேவையினரும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (94)

## மஹோற்சவம்

அராலி மத்தி உலோலைசிட்டி அருள்மிகு விநாயகர் தேவஸ்தான பார்த்திபவருஷ மஹோற்சவப் பெருவிழா - எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, எதிர்வரும் 23 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றனர். (91)

## உடற்பயிற்சிப் போட்டி

வலிகாமம் வயைத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட உடற்பயிற்சிப் போட்டி அண்மையில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் 1 ஆம் இடத்தை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலய அணியும், 2 ஆம் இடத்தை சுதுமலை சின்மய பாரதி மகா வித்தியாலயமும், 3 ஆம் இடத்தை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் பெற்றுக்கொண்டன. (44)

## மாணிக்கவாசகர் தமிழ் வித்தியாலயத்தில் புதிய நூல் நிலையம் திறந்து வைப்பு

(கரவெட்டி)

கரவெட்டி மாணிக்கவாசகர் தமிழ் வித்தியாலயத்தில் அண்மையில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசனால் நூல் நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் எஸ்.இராகவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் செல்வராசா, முன்னாள் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரும் தற்போதைய யாழ். வலயக் கல்விப் பணிப்பாளருமாகிய செல்வரட்ணம், வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அதிகாரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் 15 பெற்றோர் - தலா ஆயிரம் ரூபா பெறுமதியான பதினையாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட புத்தகங்களை நூல் நிலையத்துக்கு அன்பளிப்பாக வழங்கினர்.

இந்த நூல் நிலையம் பாடசாலையின் முன்னாள் அதிபர் சின்னையாவின் ஞாபகார்த்தமாகக் கட்டி முடிக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் திறப்பு விழாவில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர், கல்வியதிகாரிகள் பலரும் - இந்த முயற்சியைப் பாராட்டினர். நன்றியுரையை அபிவிருத்திச் செயலாளர் நிகழ்த்தினார். (13)

## கலாசார மரபுரிமை அமைச்சினால் தேசிய இலக்கிய கலைப் பெருவிழா

கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சு 2005 ஆம் ஆண்டுக்கான தேசிய இலக்கிய கலைப் பெருவிழா ஒன்றை நடத்தவுள்ளது.

இந்த விழாவின் முதற்கட்டமாக எதிர்வரும் மே மாதம் 5, 6 ஆம் திகதிகளில் பிரதேச செயலக மட்டத்தில் நடைபெறவுள்ளது.

கட்டுரை, கவிதை, சிறுகதை, கையெழுத்துப் பிரதிப் போட்டி, சித்திரம், நாட்டுப் புறப்பாடல், நடனம் என்பன - சிரேஷ்ட பிரிவு, கனிஷ்ட, பிரிவு திறந்த போட்டிகளாக நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகள் தொடர்பான விதிமுறைகளையும், விடயங்களையும், விண்ணப்பப் படிவத்தையும் அந்தந்தப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் ெ பற்றுக்கொள்ள லாம்.

இந்தப் போட்டி - பிரதேச மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் என நடத்தப்படவுள்ளன.

இதற்கென நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்தும், தனிப்பட்ட கலைஞர்கள், எழுத்தாளர்களிடமிருந்தும் படைப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

படைப்பாளிகளின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் கலாசார மற்றும் தேசிய வள அமைச்சால் ஆண்டு தோறும் நடத்தப்படும் கலைப் பெருவிழாவில் - 2005 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பங்களே படைப்பாளிகளிடமிருந்து கோரப்பட் டுள்ளன.

படைப்பாளிகள் விண்ணப்பப் படிவங்களையும், நிபந்தனைகளையும் அலுவலக நேரங்களில் நல்லூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொண்டு- தமது ஆக்கங்களையும், படைப்புகளையும் எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் நல்லூர் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கும்படி, நல்லூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (72, 63)



வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற இ.சுப்பிரமணியம் எழுதிய 'கூட்டுறவுக் கருவூலங்கள்' நூல் வெளியீட்டு விழாவில் - சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக்கொள்பவர்களையும், இந்த நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்ட முக்கிய பிரமுகர்களையும், பொது மக்களையும் படங்களில் காணலாம்.

# என்னதான் நடக்கிறது

# விளையாட்டு அரங்கம்



ஆசியாவில் டெஸ்ட் கிரிக்கெட் விளையாடும் நாடுகள் நான்கு. இந்த நான்கு நாடுகளிலும் மிகப்பிரபல்யமான விளையாட்டும் கிரிக்கெட் ஆட்டம்தான். அதே போல மிகப் பிரபல்யமான சபைகளும் கிரிக்கெட் சபைகள் தான். இந்த நிலையில் பாகிஸ்தான் பொறுத்து, அந்த நாட்டின் கிரிக்கெட் சபைத்தலைவர் நாட்டு ஜனாதிபதியின் விருப்பத்துக்கு உரியவராகவே இருப்பார். ஆனால் ஏனைய மூன்று நாடுகளிலும் அப்படியல்ல. இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் நாடுகளில் சுதந்திர மான அமைப்பாகவே கிரிக்கெட் சபைகள் இயங்குவது வழக்கம். இந்த நிலை 1990 ஆம் ஆண்டுகளின் மத்தியில் இருந்து மாற்றம் பெற்று, விளையாட்டுத்துறை அமைச்சர் தலையிட்டு இடைக் கால நிர்வாகசபை அமைக்கும் நிலை ஒன்று புதிதாக உருவாகியது.



மாவன் அத்தப்பத்து இருவருமே எம் பக்கம் தான்

தற்போது திலங்க சுமதிபால தலைமையில் மிக அண்மையில் அமைந்த கிரிக்கெட் சபை கலைக்கப்பட்டு, இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் ஜீவன் குமார துங்கவினால் இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்பட்டுள்ளமை இது நான்காவது தடவையாகும். முன்னதாக றெயின்ஸி, விஜயதிலக, ஹேமக அமரசூரிய, விஜய மலல சேகர என்ற வரிசையில், இப்போது கிரிக்கெட் இடைக் கால நிர்வாக சபைத் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பவர் ஜயந்த தர்மதாஸ.

இந்தத் திடீர் கலைப்பு மற்றும் நியமனம் தொடர்பாகக் கருத்து வெளியிடும் விமர்சகர் ஒருவர் - சிலவேளைகளில் சில விடயங்கள் தொடர்பில் அமைச்சர் பிழையான தகவல்களை நம்பிவிட்டாரோ என்று ஐயம் தெரிவித்துள்ளார். சபையைக் கலைத்தமைக்கான முதன்மைக் காரணமாக 321 மில்லியன் ரூபா தொடர்பான நிதி நிர்வாக ஒழுங்கின்மை என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆனால் இலங்கைக் கிரிக்கெட்சபை பொருளாளர் நுஸ்கி முகமட் இந்த நிதிப்பிரச்சினை, தொலைக்காட்சி அனுசரணைகள் தொடர்பில் மலலசேகர இடைக்கால நிர்வாக சபைக் காலத்தில் தான் ஏற்பட்டது என்றும், தற்போதைய கணக்கு வழக்குகள் சரியான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டது, உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் கூறுகிறார்.

அடுத்து ICC/ACC கூட்டங்களில் டுபாய், பாகிஸ்தான், இந்திய நாடுகளுக்குச் செல்ல கிரிக்கெட்சபையின் தலைவர் திலங்க சுமதிபால தீர்மானித்திருந்தார். ஆனால் இதுபற்றி விளையாட்டுத்துறை அமைச்சருக்கு அறிவிக்கப்படவில்லை. ஒழுங்கு விதிகளுக்கு அமைய இது தவறென்றே சுட்டிக்காட்டப்படுகிறது. என்றாலும், இலங்கையின் கிரிக்கெட் வரலாற்றைப் பார்த்தால், கிரிக்கெட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்கள் இப்படியான விடயங்களில் முதன்மைபெற்று, மக்கள் கசப்புணர்வு மேலோங்கி இருப்பதையும் குறிப்பிடவேண்டும்.

திலங்க சுமதிபால கருத்துக்கூறுகையில் - இலங்கை கிரிக்கெட் சபை 600 மில்லியன் ரூபா சேகரித்துள்ளதாகவும், 2007 உலகக்கிண்ணப் போட்டிகளுக்கும், 2011 ஆம் வருட உலகக் கிண்ணப்போட்டிகளுக்கு இணை ஏற்பாட்டாளராகவுள்ள தேவைகள் பொறுத்தும் இந்தப்பணம் செலவிடப்படும் என்றும் கூறியிருக்கிறார்.

திலங்க சுமதிபால செயற்திறன் மிக்க ஒரு தலைவர் என்று பெயர் எடுத்தவர். அதேபோல ஜீவன் குமாரதுங்க பல சிக்கல்களை குறுகிய காலத்தில் வெட்டி ஆடி வெற்றிகண்டவர்.

ஆனால் இரண்டு திறமைசாலிகள் நீதிவேண்டி நீதிமன்றத்தில் சந்திக்கப் போகிறார்களே என்று நினைக்கும்போது, மனதுக்கு கஷ்டமாக இருக்கிறது. சம்பந்தப்பட்ட எல்லாத்தரப்பும் மனம் நோகாது இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது எவ்வாறு?.. புரியவில்லை.

– நிர்மலன்.

# தூயர் பகிரும் துடுப்புகள்

இந்திய –பாகிஸ்தான் அணிகளிடையே விசாகப்பட்டினத்தில்நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியில் – அப்துல் ரசாக்குக்கு காலில்ஏற்பட்ட தசைப்பிடிப்பால் அப்ரிடி அவருக்கு BY RUNNER ஆகக்களமிறங்கினார்.அப்துல் ரசாக் 77ஓட்டங்கள் பெற்றிருக்கையில் களம்புகுந்த அப்ரிடி, ரசாக் 88 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்துசெல்ல, 11 ஓட்டங்களைமாத்திரம் மேலதிகமாகஅவருக்காகப் பெற்றுக்கொடுத்தார்.



சயீட் அன்வர் வேதனையிலும் சாதனை

இந்த வகையில் இந்திய– பாகிஸ்தான் அணிகளிடையே நடைபெற்ற ஒருநாள்போட்டிகளில் BY RUNNER ஒருவர்பெற்ற அதிகூடிய ஓட்டங்களையும், அதிகுறைந்த ஓட்டங்களையும் நோக்குவோமாயின், அப்ரிடியே கூடுதல் ஓட்டங்கள் பெற்றுக்கொடுத்த BY RUNNER ஆகக் காணப்படுகிறார்.

– பாகிஸ்தான்அணியின் முன்னாள் ஆரம்பத் துடுப்பாட்டவீரர் சயீட்அன்வர் பெற்ற 194 ஓட்டங்களே, ஒரு நாள் போட்டியொன்றில் தனிநபர் பெற்றஅதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாகக் காணப்படுகிறது. இந்த உலக சாதனையை 1996 / 97 காலப்பகுதியில் இந்தியாவின் பொன்விழா சுதந்திரக் கிண்ண போட்டித்தொடரில் இந்தியாவுக்கெதிராக அவர் நிகழ்த்தியிருந்தார். சென்னையில் நடைபெற்ற இந்தப் போட்டியில், அவரால் ஓடிப்பெறப்பட்ட ஓட்டங்களின் எண்ணிக்கை ஆக 132 மட்டுமே. இதன்பின்னர் அவருக்கு காலில் தசைப்பிடிப்பு ஏற்பட, எஞ்சிய 62 ஓட்டங்களையும் BY RUNNER ஆன சஹிட் அப்ரிடியே பெற்றுக்கொடுத்தார்.

இதேபோன்றதொரு சந்தர்ப்பமே இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு – 2003 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலக கிண்ணப்போட்டிகளில் ஏற்பட்டது. பாகிஸ்தானுக்கெதிராக நடைபெற்ற ஆட்டத்தில், டெண்டுல்கர் 90 ஓட்டங் களைக்கடந்த போது, அவருக்கு காலில் தசைப்பிடிப்பு ஏற்படத்தொடங்கியது. ஒருநாள் போட்டிகளிலும் சரி, டெஸ்ட் போட்டிகளிலும் சரி, தனக்கு BY RUNNER வைத்து ஓட்டங்கள் எடுப்பதில் என்றுமே அவருக்கு உடன்பாடு இருந் தது கிடையாது. இருந்தாலும், வலிதொடர்ந்து அதிகரிக்க ஒன் றுமேசெய்ய இயலாத கட்டத் தில் தான் BY RUNNER க்கு அழைப்பு விடுத்திருந்தார். இதையடுத்து 98 ஓட்டங்களைப் பெற்றிருந்த சச்சினு க்கு BY RUNNER ஆக ஷேவாக் களமிறங்கினார் .ஆனாலும் 98 ஓட்டங்களிலேயே அக்தரின் பவுண்ஸர் பந்து வீச்சில் சச்சின் துரதிஸ்ட வசமாக ஆட் டமிழந்து விட்டார். ஆக BY RUNNER ஒரு ஓட்டத்தைக் கூட பெற்றுக்கொடுக்காத சந்தர்ப்பமாக இது அமைந்துவிட்டது.



சச்சின் டெண்டுல்கர் சிங்கத்தின் கால்கள் பழுதுபட்டாலும் சீற்றம் குறைவதுண்டோ?

– விமலன்.

# நெஞ்சம் உருகி நிற்கிறோம்

சர்வதேச விளையாட்டுக்களில் உலகில் மிக அதிகமான மக்கள் தொகையைப் பிரதிபலிக்கும் விளையாட்டு என்றால் அது உதை பந்தாட்டம் தான். இதற்கு அடுத்த இடம் பெறும் எந்த விளையாட்டாக இருந்தாலும், ரசிகர் எண்ணிக்கையில்' அது பற்பல படிகள் கீழே தான் இருக்கும். இந்த வாரத்தில் மிகவும் மனத் துயரமான ஒரு நிகழ்வில் தனது துயர அலைகளை உடனேயே வெளிப்படுத்தியிருக்கிறது FIFA. FIFA (சர்வதேச உதை பந்தாட்ட சம்மேளம்) குடும்பம் பாப்பரசர் இரண்டா வது அருளப்பர் சின்னப்பரின் (POPE JOHN PAUL 11) மறைவின் துயரத்தில் உலகளாவிய மக்களுடன் இணைந்து கொள்கிறது என்று FIFA இன் அறிக்கை தனது அஞ்சலிக் குறிப்பில் தெரிவித்துள்ளது.



பாப்பரசர்ஜோன் போல் துயரத்தின் எல்லை

உலகின் சமாதானத்துக்கும், பரஸ்பர அன்பிற்குமாக பாடுபட்டவர் இவர் என்பதோடு, பரிசுத்த பாப்பரசர் இளமையில் ஒரு உதைபந்தாட்ட வீரராக சிறப்பாக ஒரு கோல்காப்பு வீரராக இருந்தவர் என்பதையும் குறித்துக்காட்டுகிறது. FIFA உடன் இவர் நீண்ட கால கால நெருங்கிய உறவை வைத்திருந்ததோடு, கடந்த பதினைந்து வருட காலத்தில் FIFA இன் அதி முக்கிய தூதுக்குழுக்களைச் சந்திக்க விருப்புடன் நேரம் ஒதுக்கிக்கொடுத்தவர். இவரது இழப்பை நாம் மிகவும் துக்கத்துடன் உணர்கிறோம் என்கிறது அந்த அஞ்சலிக்குறிப்பு. உலக விளையாட்டுத் துறைசார்ந்த அனைவரும் FIFA இன் அஞ்சலி உணர்வலைகளுடன் மனம் நெகிழ்ந்து ஒன்றுபட்டு நிற்கிறா ர்கள்.

– அன்ரனி.

# தேவதையைக் கண்டார்கள்

வடஅமெரிக்காவின் மியாமியில் நடைபெற்ற நஸ்டக் -100 (NASDAQ -100) ரெனிஸ் போட்டிகளில் மகளிர் ஒற்றையர்போட்டிகளில் கிம் கிளிஸ்ரர்ஸ் வெற்றிவாகை சூடியிருக்கிறார். முன்னதாகலின் ட்ஸே டெவன் போர்ட்டைத் தோற் கடித்து இன்டியன் வெல்ஸ் கிண்ணத்தை வென்ற போதுகிம் கிளிஸ்ரர்ஸ் தரவரிசையில் 133 இல் இருந்து 38க்கு முன்னேறினார். இதனைத் தொடர்ந்து நடைபெற்றதுதான் நஸ்டக் -100.. குறிப்பிடத்தக்க பிரபல்யங்கள் அத்தனை பேரும் கலந்து கொண்ட சிறப்பாக மகளிர் ரெனிஸ் தரவரிசையில் முதல் ஐந்து இடங்களையும் வகிக்கும் பெண்மணிகள் கடும் போட்டியிட்ட சுற்றுப்போட்டியில் தரம் 38 ஐப் பெற்ற ஒருவர் எந்தளவு தூரம் சமாளிக்க முடியும் என்பது எல்லோருக்கும் ஆச்சரியமான கேள்வியாக இருந்தாலும், கிம் கிளிஸ்ரர்ஸ் வேறு விதமாக யோசித்திருக்கிறார்போலத் தெரிகிறது. தற்போது அவரின் தரவரிசை 17.இவர் இறுதிப்போட்டியில் தோற்கடித்தது உலகத் தரவரிசை மூன்றை தன்னகத்தே கொண்ட விம்பிள்டன் சம்பியன் மரியா ஷரபோவாவை. அரையிறுதிப் போட்டிகளில் மொறிஸ்மோவைத் தோற்கடித்த இவர். முன்னதாக தர வரிசை நான்கைக் கொண்ட எலீனா டிமென்ரீவா. அனஸ்ரா சியாமிஸ்கீனா முதலியோரைத் தோற்கடித்திருந்தார் .



ஷரபோவா கவலையா அம்மணி

மறுபுறம் ஹெனின் ஹார்டெய்ன் பின்னர் வீனஸ் வில்லியம்ஸ் போன்றோரைத் தோற்கடித்து. மரியா ஷரபோவா இறுதியாட்டத்துக்கு வந்திருந்தார். இந்த வகையில் இவருக்கும் தன்னம்பிக்கை பெரிதாகவே இருந்திருக்கும். ஆனால் நீண்ட காலம் உபாதைகளால் பாதிக்கப்பட்டிருந்த கிளிஸ்ரர்ஸ். தற்போதுஇருக்கும் நிலையில் யாரையும் விட்டுவைப்பார் போலத்தெரியவில்லை. அண்மைக் காலத்தில் மகளிர் ரெனிஸ் போட்டிகளில் ரஷ்யா பற்றிய பேச்சு அதிகமாக இருந்தது. இனிவருங்காலங்களில் பெல்ஜியம் பற்றியும் அதிகமாகப் பேசும்படி வைப்பார் கிளிஸ்ரர்ஸ்.



கிளிஸ்ரர்ஸ் தடைகள் சிதறும்

– மக்டலின்.

# பார்த்துப் பழகுதல் நன்று



ஷேவாக்
வழுக்கும் கவனம்

இந்திய கிரிக்கெட் அணியின் இன்றைய முக்கிய நபர் யாரென்றால் அது அணித்தலைவர் கங்கூலியல்ல. ராகுல் ராவிட்தான். பத்திரிகையாளர்கள் அவரைத் தான் இப்போது மொய்க்கிறார்கள். ஆனால் அவரோ நிதானம் குலையாதவராக தளம்பலின்றிப் பதில் சொல்கிறார். பொதுவாழ்வில் ஈடுபடுபவர்கள் எத்தகைய இயல்பு கொண்டிருக்கவேண்டும் என்பதற்கு இவர் உதாரணம். கங்கூலி சிறிது தளர்வுற்றிருக்கிறார் என்பதால், இந்திய அணி பலமிழந்து போய்விட்டதாக எண்ணுவது தவறு என்பவர், கங்கூலியின் நிலை எல்லோருக்கும் ஏற்படுவது தான். கங்கூலி விரைவிலேயே நல்ல தகுதியைப் பெற்றுவிடுவார் என்கிறார். அணியாக இணைந்து செயற்படுகையில் இவர் செயற்பாடு குறைந்துபோவது இயல்பு தான்.

ஆனால் மற்றவர்கள் அதனை நிரவவேண்டும். அதுவே பிரதானம் என்கிறார். ஷேவாக் பற்றிக் கூறும் போது - அவரது உயர்வீச்சு அபாரமானது. ஆனால் அவர்மட்டுமே அணியாகிவிடாது. எல்லோரது பங்களிப்பும் ஏதோ ஒரு வேளையில் அணிக்கு மாறிமாறி இருந்து கொண்டே இருக்கும் என்பவர், பாகிஸ்தானின் பலம் பொறுத்து தான் மிகுந்த மதிப்புக் கொடுப்பதாகக் கூறுகிறார்.

இதேவேளை பெங்களூர் டெஸ்ட் போட்டியில் இந்தியா தோல்விகண்ட பின் ஷேவாக் சிறிது ஆத்திரமுற்றவர் போலக் கதைத்ததையும் நினைவு கூர வேண்டும். தன்னைப் போல ATTACKING கிரிக்கெட் மற்றவர்கள் ஆடியிருந்தால், வெற்றி பெற்றிருக்க முடியும் என்று ஒரு கணிப்பீட்டை அவர் செய்திருந்தார். DEFENSIVE ஆக விளையாடிய வீரர்கள் மீது அவர் சிறிது அதிருப்தி கொண்டது போலவும் தோன்றியது. எப்பொழுதுமே ஷேவாக்கிற்கு தன்னம்பிக்கை அதிகம். ஆனால் தன்னம்பிக்கையுடன் விவேகமும் சேர வேண்டும். நிலைமையைப் புரிந்து கொண்ட சச்சின் மிக நீண்டநேரம் தனது விக்கெட்டை தக்கவைத்துக்கொண்டதென்பது. அநேகமாக பெங்களூர் டெஸ்ட் போட்டியை வெற்றி தோல்வியின்றி முடிக்கும் ஒரு நிலைக்குக் கொண்டு சென்றது என்பது உண்மை.




ராகுல் ராவிட்
நிலையான பதிவு

அப்போது இந்தியாவிற்கு ஓட்டங்கள் பெரிதல்ல, விக்கெட்டுக்களைக் காத்துக்கொள்வதே அவசியம் என்பதை சச்சின் நன்றாகப் புரிந்து கொண்டிருந்தார். இன்னொருபுறம் கும்ளே சேர்ந்து பெறுமதியான முப்பத்தியேழுஓட்டங்கள் சாமானியமல்ல. ஒரு முன்னிலை வீரரைப்போலவே தன் பங்கை நிறைவேற்றியதைக் குறிப்பிடவேண்டும். எனவே ஷேவாக் தன்முனைப்பான கருத்துக்களைக் கூறும் போது இடம், பொருள், ஏவல் போன்றவற்றையும் கவனத்தில் எடுத்தல் நன்று. அல்லது ராகுல் ராவிட்டிடம் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளல் நன்று.

-செந்தூரன்.

# மனிதன் மாறிவிட்டான்



பிரெடி ட்ரூமன்
எல்லை தாண்டிய உறவு

பொப் சிம்ஸன் அவுஸ்ரேலிய கிரிக்கெட், உலகுக்கு அளித்த மகத்தானவர்களுள் ஒருவர். அவர் இளமையில் ஆடிய வரலாறு ஒருபுறம்; அதன் பின் கெரி பெக்கர் சீரிஸ் தொடர்பில் அவுஸ்ரேலியா வீழ்ச்சி கண்டபோது, அவுஸ்ரேலிய அணியை நிமிர்த்தி எடுத்த வரலாறு இன்னொருபுறம். இன்றும் இவரது கிரிக் கெட் அவதானங்கள், தொடர்புகள் குறைந்து போய்விடவில்லை. அவரது சில அவதானங்கள் மிகுந்த கனதியுடன் நோக்கப்படத்தக்கன.

எகிறிஎழும் பந்துவீச்சு (BOUNCERS) பற்றிப்பேசும் இவர் - இதுவும் கிரிக்கெட் என்ற வகையில் விளையாட்டில் ஒரு பகுதிதான் என்பவர், இந்த வகையில் தலைக்கு மேலால் செல்லும் பந்துகளை ஓரளவில் ஏற்றுக்கொள்ளலாம்.

ஆனால் நாரி எலும்பை நோக்கி எகிறப்படும் பந்துகளைத் தான் ஏற்றுக்கொள்ள முடியாதென்கிறார். டொன் பிரட்மனுடைய தொல்லை தாங்க முடியாமல் இங்கிலாந்து அணி 1932 / 33 BODY LINE பந்துவீச்சுக்களை அறிமுகப்படுத்த, அவுஸ்ரேலிய வீரர்கள் அதிகம் பேர் காயப்பட, அதனால் அவுஸ்ரேலியாவுக்கும் இங்கிலாந்துக்கும் 'கிரிக்கெட் அரசியல்' முறுகல் நிலை ஏற்பட்டதும் ஒரு வரலாறு.

இங்கு சிம்ஸன் வேறு விடயங்களும் பேசுகிறார். அப்பொழுதெல்லாம் திட்டமிட்டோ, அல்லாமலோ பவுண்ஸர்கள் போட்டால் துடுப்பாட்ட வீரரிடம் பந்துவீச்சாளர்கள் மன்னிப்புக்கேட்கும் பழக்கம் இருந்தது. அதனை துடுப்பாட்ட வீரரும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளும் நிலையும் இருந்தது. தனது பழைய நினைவுகளை மீட்கும் இவர் அந்தக் காலத்து அதிவேக மேற்கிந்திய பந்து வீச்சாளர் வெஸ்லி ஹோலின் நான்கு பந்துகளை தொடர்ச்சியாக பவுண்டரிகளாக்க, அடுத்த பந்து தனது காதுக்கு அருகில் 'மின்னிக்கொண்டு' போனதை இன்னும் மறக்க முடியவில்லை என்கிறார்.

டொன் பிரட்மன் இங்கிலாந்தின் BODY LINE பந்து வீச்சுத் தொடர்பில் தோல்விகாண, இதற்கு ஒரு மறுத்தானாக அவுஸ்ரேலியாவில் உருவாகிய வேகப்பந்து வீச்சாளர்கள் தான் லிண்ட்வோர் மற்றும் மில்லர். மேற்கிந்தியத் தீவுகளின் புகழ்பூத்த மூன்று 'W'க்களையும் இவர்கள் படாதபாடுபடுத்த, அந்தக் கசப்பான அனுபவங்களுக்குப் பதில் கொடுக்க மேற்கிந்தியத்தீவுகளில் உருவாகியவர்கள்தான் வெஸ்லி ஹோல் மற்றும் சார்லி கிரிபித். இவர்களுள் ஒருவர் பற்றித்தான் சிம்ஸன் கூறியுள்ளார். எந்த ஒரு வேகப்பந்து வீச்சாளரையும் விட வெஸ்லி ஹோல்தான் எனக்குக் கூடுதலான பவுண்ஸர்களை வீசியவர். ஆனால் ஆட்டங்கள் முடிவடைந்ததும் இருவரும் ஒன்றாகவே மாலைவேளைகளைக் கழிப்பது வழக்கம் என்கிறார் அவர்.



பொப் சிம்ஸன்
பழைய பாடல்போல
புதிய பாடல் இல்லை

இன்னொரு வேகப்பந்து வீச்சாளர் இங்கிலாந்தின் பிரெடி ட்ரூமன். இவர் பற்றி சிம்ஸன் கூறும் போது இவரும் பவுண்ஸர் மன்னன்தான். நான் இவருக்குக் கொதிகிழப்ப வேண்டுமென்றே திட்டமிட்டு ஒவ்வொரு பந்துக்கும் ஒரு ஓட்டமாவது எடுத்துக்கொண்டே இருப்பேன். இதனால் அவரிடம் நான் வேண்டும் ஏச்சுப்பேச்சுக்குக் குறைவில்லை. ஆனால் இதெல்லாம் மைதானத்தில் மட்டும் தான். எல்லைக் கோட்டைக் கடந்து விட்டால், எங்கள் உறவுகளே அலாதியானது தான் என்கிறார். இன்று கூட எனது நெருங்கிய நண்பர்கள் யாரென்று கூறினால் ஆச்சரியப்பட்டுப்போவீர்கள். வெஸ்லி ஹோல், பிரெடி ட்ருமன், பீட்டர் பொலக் போன்ற வேகப்பந்து வீச்சாளர்கள்தான் எனது நண்பர்கள் என்கிறார்.

பொப் சிம்ஸன் தன் கருத்துத் தொகுப்பில் மிகவும் ஆதங்கப்படுவது இன்றைய நிலையை ஒப்பிட்டாகும். இன்று பகைமையொன்றே முதன்மை என்றவாறு, வேகப் பந்து வீச்சென்பது பகை முடிக்கும் ஆயுதம் என்பது போலவும், பவுண்ஸர்கள் 'எறிகணைகள் போலவும்' பயன்படுத்தப்படுவதாக மனம் வெதும்புகிறார் இவர். அவரது மனவருத்தத்தில் நிறைய நியாயங்கள் உண்டு. இவற்றை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் கூட இன்றையவீரர்களுக்கு இருக்கிறதா என்ற வினாவிற்குத் தான் விடை தெரிய வில்லை.

- ஜோசப் கிருஷ்ணா.

# செய்வன திருந்தச்செய்

உலகின் பிரபல்யமான உதைபந்தாட்ட வீரர்கள் அதனைத் தமக்கு விருப்பமான விளையாட்டாக மட்டும் கொள்ளமுடியாது. அதுவே அவர்களின் வாழ்வாதாரத்துக்கான தொழிலாக அமைந்துவிடுவது கட்டாயமாகிறது. இப்படியான நிலையில் ஏற்ற இறக்கங்கள் ஏற்படும் போது வீரர்கள் சிறிது சஞ்சலப்பட்டுதான் போகிறார்கள். உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளுக்கான தென்அமெரிக்க நாடுகளுக்கிடையிலான போட்டிகள் சூடுபிடிக்கும் இந்தவேளையில், தென் அமெரிக்க வீரர்கள் உதைபந்தாட்ட உலகில் மிகவும் திறமைசாலிகள் என்ற வகையில் தமது ஐரோப்பியக் கழகங்களின் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இந்த வகையில் தான் பிரேசில் நாட்டின் ஸ்பானியாவின் றியல் மட்ரிட் அணியினதும் நட்சத்திர வீரர் றொனால்டோ பற்றிய செய்திகள் வருகின்றன.

தற்போது பிரேசில் செல்லவிருக்கும் றொனால்டோ அவ்வளவு மகிழ்ச்சியாக இல்லை. இதற்குக் காரணம் றியல் மட்ரிட் கழக அணிக்காக தனது முழுத் திறமையையும் வெளிப்படுத்த முடியாத நிலைமையும், குறிப்பாக ஒருசில கோல்கள் போட முடியாத நிலை ஏற்பட்டதுமாகும். இருந்தாலும் றியல் மட்ரிட் கழகத்தில் தனக்கு ஏற்பட்ட தளர்வு, தனது தாயகமான பிரேசிலுக்குச் சென்றதும் நீங்கிவிடும் என்று நம்புகிறார் றொனால்டோ. இதுவரை பிரேசில் கலந்து கொண்ட போட்டிகளில் ஒன்பது கோல்கள் போட்டிருக்கிறார் றொனால்டோ. தற்போது ஆர்ஜென்ரீனாவுக்கு அடுத்த நிலையில் பிரேசில் நிற்பதற்குக் காரணம் றொனால்டோவும் தான்.

இருந்தாலும் ஸ்பானியாவின் அனுபவங்கள் அண்மைக் காலத்தில் றொனால்டோவுக்கு கசப்பானவைதான். பல ஆட்டங்களில் இவருக்குப் பதிலீடாக வீரர்கள் இறக்கப்பட்டமை இவருக்கு மகிழ்ச்சியான விடயமல்ல. இதற்கும் மேலாக ஜுவென்டஸ் அணியுடனான போட்டியில் மைதானத்தில் இருந்து நடுவரால் வெளியேற்றப்பட்டார். அந்த ஆட்டத்தில் 2-0 என்று றியல் மட்ரிட் தோல்வியுற்றது மட்டுமல்ல, அந்தச் சுற்றுப்போட்டியில் இருந்து வெளியேறவும் நேரிட்டது. இன்னொரு சம்பவத்தில் மலாகா அணிக்கு எதிரான போட்டியில் ரசிகர்கள் இவரைப் பார்த்துக் கூச்சலிடவே பிளாஸ்ரிக் தண்ணீர்ப் போத்தல்களை ரசிகர்கள் மீது விட்டெறிய அதுவும் சர்ச்சையாகிப் போனது. அணியும் 1-0 என்று தோல்வி கண்டது. அதன் பின்னர் தற்போது பிரேசில் சென்றிருக்கிறார் இவர். இப்பொழுது இவரது முதன்மைக்கவனம் இரண்டு விடயங்கள் சார்ந்தது. ஒன்று பிரேசில் வெற்றிபெற உழைக்கவேண்டும். மீண்டும் ஸ்பானியா வெற்றிபெற உழைக்கவேண்டும். இரண்டும் நடைபெற்றால் தான் இவரது தொழில் சரியாக நடக்கிறது என்று அர்த்தம்.

– சச்சின்.



றொனால்டோ
இயல்பாக
வரும்வேகம்

விளையாட்டு அரங்கம்

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்

கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com









வவுனியா மாவட்டத்தில் புதிதாகத் திறந்துவைக்கப்பட்ட இளந்தளிர் முன்பள்ளியின் பெயர்ப் பலகையை முதலாவது படத்திலும், இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் உரையாற்றுவதையும், திறந்துவைக்கப்பட்ட முன்பள்ளியில் சிறுவர்கள் விளையாடுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# வவுனியா மாவட்டத்தில் இரு முன்பள்ளிகள் திறப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் இரு வெவ்வேறு இடங்களில் புதிய முன்பள்ளிக் கட்டடங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஒருங்கிணைந்த அனுசரணையின்கீழ் கடந்த புதன் கிழமை திறந்து வைக்கப்பட்டன.

தியாகி அன்னை பூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவு நாட்களை முன்னிட்டு இவை திறந்து வைக்கப் பட்டன.

முதலாவது நிகழ்வு- காலை 10 மணியளவில் நெடுங் கேணி தெற்கு என்ற இடத்தில் நெடுங் கேணி அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் குமாரசாமி தலைமையில் நடைபெற்றது.

இந்த முன்பள்ளித் திறப்புவிழா நிகழ்வில் மங்கள விளக்கை நெடுங் கேணி காவற்துறைப் பொறுப்பாளர், வவுனியா வடக்குப் பிரதேச பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வுப் பொறுப்பாளர், நெடுங்கேணிப் பிரதேச முன் பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர், வவுனியா அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன நிர்வாக அலுவலகர் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஏற்றி வைத்தார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியை மாவட்ட உதவிப் பணிப்பாளரும், நெடுங்கேணி அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனக் கொடியை அதன் இணைப்பாளரும், முன்பள்ளி கல்வி மேம்பாட்டுக் கொடியை வவுனியா வடக்கு வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளரும் ஏற்றி வைத்தனர்.

இதனையடுத்து இளந்தளிர் முன்பள்ளிக் கொடியேற்றல் நிகழ்வு இடம்பெற்றது. இளந்தளிர் முன்பள்ளியின் பெயர்ப்பலகையை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் திரைநீக்கம் செய்து வைத்தார்.

முன்பள்ளிக்கான புதிய கட்டடத்தை டென்மார்க் அகதிகள் பேரவையின் வதிவிடப் பிரதிநிதி அலன் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வின் சிறப்புரையை அலன், விநாயகமூர்த்தி, கிஷோர், பரந்தாமன், அலை, தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்டப் பணிப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினர்.

இரண்டாவது நிகழ்வாக - பிற்பகல் 2 மணியளவில் இராமனூர் புளியங்குளம் என்னும் இடத்தில் தெய்வம் முன்பள்ளிக் கட்டடத்திறப்பு விழா நடைபெற்றது.

வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இந்தத் திறப்புவிழாவில் மங்களவிளக்கை அவுஸ்ரேலிய தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதி ரமேஸ், சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுத் தலைவர் இராசையா, முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய தெற்கு வலய இணைப்பாளர் அருள்வேல் நாயகி, வவுனியா அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் ராஜட்ணம், இராமனூர் பாடசாலை அதிபர் சுபாஸ்கரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இதனைத் தொடர்ந்து தேசியக் கொடியை வவுனியா வடக்கு பிரதேசப் பொறுப்பாளர் இனியவன், தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியை மாவட்டப் பணிப்பாளர் மூர்த்தி, முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிறுவனக் கொடியை முள்பள்ளிகளுக்கான கல்வி உதவிப்பணிப்பாளர் விநாயகமூர்த்தி, தெய்வம் முன்பள்ளிக் கொடியை அதன் ஆசிரியர் நாகசுலோசினி ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

முன்பள்ளிப் பெயர்ப்பலகையை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் திரைநீக்கம் செய்துவைக்க - முன்பள்ளிக் கட்டடத்தை டென்மார்க் அகதிகள் பேரவை வதிவிடப் பிரதிநிதி அலன் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். இதனைத் தொடர்ந்து -

இந்த நிகழ்வின் தலைமையுரைகள், சிறப்புரைகள் இடம்பெற்றன. சிறப்புரையை சிவநாதன் கிஷோர், அலன், தாசன், விநாயகமூர்த்தி ஆகியோர் நிகழ்த்தினர்.

போர்ச்சூழல் காரணமாகவும், சமூக பொருளாதார ரீதியாகவும் தங்களது வாழ்வாதாரங்களை இழந்து, தங்களது சொந்த வாழ்விடங்களில் மீளக்குடியேறிய இந்த இரு பிரதேச வாழ் மக்களின் வாழ்வாதாரங்களை மீளக்கட்டியெழுப்பும் நோக்குடன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரதேச மட்டத்திலான அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனங்களால் முன்னேடுக்கப்பட்டுவரும் வேலைத் திட்டச் செயற்பாடுகளில் ஒன்றாகவே முன்பள்ளிச் சிறார்களின் கல்வி வளர்ச்சி கருதி இரு முன்பள்ளிகளும் திறந்து வைக்கப்பட்டன .

முன்பள்ளிக்குரிய அடிப்படைத் தேவைகளை உள்ளடக்கிய இவ்விரு முன்பள்ளிகளிலும் சுமார் 120 இற்கும் மேற்பட்ட சிறார்கள் பயனடைய இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த திறப்பு விழா நிகழ்வுகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகள், தொண்டர்கள் மற்றும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், அரச திணைக்கள உத்தியோகத்தர்கள், சமூக ஆர்வலர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

# மேஜர் மாறன் நினைவாக கரப்பந்தாட்டப் போட்டி


(கிளிநொச்சி)

தமிழீழ விளையாட்டுத் துறையினரால் நடத்தப்படும் - மேஜர் மாறன் நினைவு கரப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் - ஒரு கழகத்தில் இருந்து பல அணிகள் கலந்து கொள்ளலாம்

அத்துடன் தமிழர் தாயகத்தின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் போட்டியாளர்கள் கலந்து கொள்ளலாம் எனவும், தமிழீழ விளையாட்டுத்துறையினர் அறிவித்துள்ளனர்.

மேலும் போட்டிக்கான விண்ணப்படிவத்தை மாவட்ட தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளரிடம் அல்லது விளையாட்டுத்துறை நடுவப்பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.




# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## ஏப்ரல் - 10

1813 : சிறுசிறு கோள்கள் குறிப்பிட்ட ஒரு புள்ளியைச் சுற்றியே வருகின்றன என்பதைக் கண்டுபிடித்தவரும் தலைசிறந்த வரும் கணித மேதையுமான காம்ப்டி ஜோஸப் லூயிஸ் லாக்ரேன்ஞ் மரணமானார். சிறிய கோள்களை மையமாகக்கொண்டு சுற்றிவரும் அந்தப் புள்ளி இவரது பெயருடனேயே 'லாக்ரேன்ஞ்' புள்ளி என்று அழைக்கப்படுகிறது.

1894 : அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் வில்லியம் ஹண்ட் என்பவர் உடைகளுக்குப் பயன்படுத்தப்படும் ஊசிகளைத் தயாரித்து அதற்கான காப்புரிமையையும் பெற்றார்.

1902 : தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவந்த 'போயர்' யுத்தம் முடிவுக்கு வந்தது.

1917 : முதன்முதலாக பிரிட்டன் தனது எதிரிநிலைகளைப் புகைப்படம் எடுத்து அனுப்ப விமானப்படையை பயன்படுத்தத் தொடங்கியது.

* : ஆஸ்திரியா தான் கைப்பற்றிய போலந்து தேசத்தின் ஆதிக்கத்தை ஜேர்மனிக்கு மாற்றிக் கொடுத்தது.

1918 : கனடாவில் 10 கோடி டொலர் போர்க்கடன் சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது.

1932 : ஜேர்மனியில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் 60,00,000 வாக்குகளால் ஹிட்லரைத் தோற்கடித்து, ஹிண்டன்பர்க் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1940 : டென்மார்க்கின் மீது படையெடுத்த ஜேர்மனி - பன்னிரண்டு மணி நேரத்துக்குள் அந்த நாட்டின் தலைநகரான கோபன்ஹேகனைக் கைப்பற்றியது.

1943 : இந்த மாதம் 7 ஆம் திகதி ஹிட்லரின் தலைமையகத்தில் ஆரம்பித்த ஹிட்லர் - முஸோலினி பேச்சு வார்த்தை முடிந்தது.

1953 : லாவோஸ் மீது வியட்நாம் படையெடுத்தது.

1959: ஜப்பானின் 2619 ஆண்டுகால முடியாட்சியில் முதன்முதலாக பட்டத்து இளவரசர் அஹிகிட்டோ ஒரு சாதாரண குடிமகளை மணந்து கொண்டார்.

1982 : இந்தியாவின் தகவல் தொடர்பு தொலைக்காட்சி வானிலை ஆய்வு செயற்கைக் கோளான 'இன்ஷாட் - 1 ஏ' அமெரிக்காவின் கென்னடி விண்வெளி மையத்திலிருந்து டெல்டா ஏவுகலம் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது.

1988 : உலகிலேயே இரண்டடுக்குப் பாலங்களில் மிக நீளமான பாலமான ஸெட்டோகோசி பாலம் ஜப்பானில் திறந்து வைக்கப்பட்டது. ஹோன் சுவாமையும் ஷீக்கோக்குத் தீவையும் இணைக்கும் 9.7 கிலோமீற்றர் நீளமான பாலம் இதுவாகும்.

தொகுப்பு - சந்துரு

# கிளிநொச்சிக்கான தொலைபேசி சேவை சீரான முறையில் இயங்கவில்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தொலைபேசி இணைப்புக்கள் தடைப்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த மாவ்ட்டத்தில் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்தில் பாவனையில் இருக்கும் மிகவும் பழமை வாய்ந்த மின் பிறப்பாக்கி செயலற்றுப்போகும் நிலையில் இருப்பதாகவும், இலங்கை அரசின் திட்டமிட்ட தடையால் புதிய மின் பிறப்பாக்கியை வன்னிப் பெருநிலப்பரப்புக்குக் கொண்டு வரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

அத்துடன் நிலக்கீழாக அமைக்கப்பட்டுள்ள தொலைத்தொடர்பு பரிவர்த்தனைக் கருவிகளும் சீரற்ற முறையில் உள்ளதால், அவற்றை நவீன முறைப்படுத்தி சீரான சேவையை வழங்குமாறு பலதடவை கேட்டுள்ள போதும், இதுவரை எந்த முயச்சியும் பயன் தரவில்லை என அறியமுடிகிறது.

சமாதானச் சூழல் ஏற்பட்டதன் பின்னர் - கிளிநொச்சிக்கு வழங்கப்பட்ட தொலைபேசி இணைப்புகள் இன்றுவரை சீரான நிலையில் இயங்கவில்லை.

வன்னி பெருநிலப் பரப்புக்கான அனைத்துத் தொலைத்தொடர்பு சேவைகளும் மிக விரைவில் தடைப்படும் நிலை ஏற்படும் என அஞ்சப்படுகிறது.

# மறைந்த பாப்பரசருக்கு கிளிநொச்சியில் அஞ்சலி

(கிளிநொச்சி)

மறைந்த பாப்பரசருக்கு எமது இதய அஞ்சலி பூக்களை அர்ப்பணிக்கின்றோம் என கிளிநொச்சி வர்த்தக சங்கம் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இன, மத, நிற, மொழி பேதங்களைப் பாராது - அல்லலுறும் மக்களுக்காக தமது பணிகளை அர்ப்பணிப்புடன் முன்னெடுத்த பெரும் மனிதரின் மறைவுத் துயரில் எமது சங்கமும் பங்குகொள்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் -

உலகத்திலுள்ள நலிந்த மக்களுக்காகவும், அடக்கப்படும் இனங்களுக்காகவும் குரல் கொடுத்தவரும் - அம்மக்களைக் கண்டு ஆறுதல்படுத்தியவருமாகிய பாப்பரசரின் இழப்பால் உலக மக்களுடன் சேர்ந்து நாமும் எமது இதய அஞ்சலியைச் செலுத்துகின்றோம் என அந்த இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அன்னை பூபதியின் ஞாபகார்த்தமாக கரப்பந்தாட்ட மற்றும் தாச்சிப் போட்டி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பரந்தன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையும், தமிழீழ விளையாட்டுத்துறையும் இணைந்து நடாத்தும் - தியாகி அன்னை பூபதியின் 17ஆம் ஆண்டு ஞாபகர்த்த கரப்பந்தாட்ட மற்றும் தாச்சிப் போட்டிகள், எதிர்வரும் 15 ஆம் திகதி பரந்தன் இளைஞர் வட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் கிளிநொச்சி மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்கள் பங்குபற்றவுள்ளன.

இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் பரந்தன் இளைஞர் வட்ட மைதானத்தில் மாலை 5 மணிக்கு பதிவை மேற்கொள்ளலாம்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*மறைந்தவை கேட்கவற்று ஆகி அறிந்தவை*
*ஐயப்பாடு இல்லதே ஒற்று.*

திருக்குறள்

# நமது நோக்கு

## தொடரும் ஆயுதக் குழுக்களின் அராஜகங்கள்; முற்றுப்புள்ளியை நோக்கும் அமைதி முயற்சிகள்!

கடந்த பெப்ரவரி மாதத்துக்கும் மார்ச் மாதம் முதல் வாரத்திற்குமிடையே கிழக்கில் மட்டு. அம்பாறை மாவட்டங்களில் விடுதலைப்புலிகளுக்கும், அவர்களின் ஆதரவாளர்களுக்கும், மற்றும் தமிழ்த்தேசிய உணர்வாளர்க்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களின் பின்னணி குறித்து ஆராயவென ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட ஆணைக்குழு தனது விசாரணைகளை நடத்தி வரும் சூழலிலும், தொடர்ந்தும் கிழக்கின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து ஊடுருவிச் சென்று புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் தாக்குதலை நடத்தும் குழுக்களின் அராஜகச் செயல் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

இப்போது மேற்கொள்ளப்பட்டுவரும் ஆணைக்குழுவின் விசாரணைகள் ஒரு கண்துடைப்பு நடவடிக்கையே என்பதை நாம் ஏற்கனவே இப்பகுதியில் குறிப்பிட்டிருந்தோம்.

இந்த விசாரணையில் இருந்து கிடைக்கும் தகவல்களை வைத்துக் கொண்டு, அரசு அர்த்தமுள்ள நடவடிக்கையெதனையும் மேற்கொள்ளும் என எவரும் நம்பினால், அவரது அப்பாவித்தனத்திற்கு எவரும் பொறுப்பாக முடியாது.

குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுத்து அவர்களை வைத்து தமது அரசியல் இலக்குகளை அடைய முயல்வோர், ஏதும் அறியாதவர்கள் போல தம்மைக் காட்டிக் கொண்டு ஆணைக்குழுவை அமைத்து விசாரணைகளை மேற்கொள்கின்றனர்.

அதே குற்றவாளிகளை நெறிப்படுத்தி, விடுதலைப்புலிகளைச் சீண்டி, அவர்களை யுத்தசந்நதராக்கி போர்க்கோலம் கொள்ளச் சினமேற்றும் வகையில், அவர்கள் மீது தாக்குதலை நடத்த ஏவிவிடுவோரே சாட்சியங்களை அளிக்கின்றனர்.

இந்தச் சூழலில் தாக்குதலை நடத்துவோர் குறித்த தகவலை அறிந்தவர்கள்கூட, ஆணைக்குழுவின் முன் சென்று சாட்சியமளிக்க துணிவார்கள் என்று எவரும் எண்ணமுடியாது. அப்படி முன்வருவோரின் உயிர்ப்பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க எவரும் தயாராகவுமில்லை.

எனவே, இந்த ஆணைக்குழுவின் விசாரணைகுறித்து தமிழர் தரப்பு அக்கறை கொள்ளவுமில்லை, குற்றவாளிகள் தரப்பு அச்சம் கொள்ளவுமில்லை. அதனால் தான் தாக்குதலை அவர்கள் தொடர்ந்த வண்ணம் இருக்கிறார்கள்.

இங்கே ஒரு விடயத்தைக் குறிப்பிடவேண்டியது அவசியம்.

இவ்வாணைக்குழு முன் சாட்சியமளித்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட தலைமைப் பிரதிநிதி பி.ஆர்.ஸ்ரீபன் என்பவர் - இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைந்துள்ள வெலிக்கந்தப் பிரதேசத்தில் கருணா குழுவின் முகாமொன்று உள்ளதென்றும், அங்கு அவர்கள் ஆயுதங்களுடன் நிலைகொண்டு நடமாடுகின்றனர் என்றும் கூறியுள்ளதுடன், இப்படி ஒரு ஆயுதக்குழுவின் முகாம் அங்கிருப்பது ஒரு அப்பட்டமான யுத்தநிறுத்த மீறலாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

இது ஒரு முக்கியமான விடயமேயாகும்.

இராணுவப் பிரதேசத்தினுள், இராணுவத்தினரின் அனுமதியும், ஆசீர்வாதமுமின்றி ஒரு ஆயுதக்குழு முகாமமைத்து இயங்குகின்றதென்ற கூற்றை எவரும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த அடிப்படையில் பார்க்கும்போது கிழக்கின் வன்முறைகளின் பின்னணியில் யார், எவரது ஆதரவுடன், என்ன நோக்கத்துடன் செயற்படுகிறார்கள் என்பது நன்கு தெளிவாக உணரக்கூடியதாகவே உள்ளது. உண்மையில் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை தொடர்பாக படைத்தரப்பினர்க்கோ, ஆயுதக்குழுக்களுக்கோ பயமோ, மரியாதையோ இருக்குமாயின் அக்கரைப்பற்றில் புலிகளின் அலுவலகத்தினுள் அதிரடிப்படையினரின் தேடுதல் நடவடிக்கையோ, மூதூர் மஹிந்தபுரமருகே புலிகளின் காவலரண் மீதான தாக்குதல் சம்பவமோ நடந்திருக்க வாய்ப்பில்லை.

அவர்களுக்கே இந்த ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தமது நடவடிக்கைகளை எந்தவிதத்திலும் பாதிக்கச் செய்யாது என்பது நன்கு தெரியும். அதனால் தான் விசாரணைகள் ஒரு புறம் நடக்க, அவர்கள் தமது தாக்குதல்களையும் தொடர்ந்து நடத்திக் கொண்டேயுள்ளனர்.


அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல் நடவடிக்கையான இந்தத் தாக்குதல்கள் வெளிப்படையில் புலிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களாக மட்டும் தெரிந்தாலும், உண்மையில் அது சமாதானத்தின் மீது, அதனைவலியுறுத்தும் சர்வதேச சமூகத்தின் மீது, அதற்கான அனுசரணையாளராகச் செயற்படும் நோர்வே அரசின் மீது மேற்கொள்ளப்பட்ட, நன்குதிட்டமிட்ட சதிநோக்குடனான தாக்குதல்களேயாகும்.

இதுகுறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. உண்மையில் இந்தத் தாக்குதல் சம்பவங்கள் அவர்களின் செயற்பாடுகளுக்கு விடுக்கப்பட்டுவரும் சவாலேயாகும்.

தொடரும் இந்தத் தாக்குதல்களை கட்டுப்படுத்தவோ, தடுத்து நிறுத்தவோ வக்கற்ற நிலையில் உள்ள அரசும், ஜனாதிபதியும் சமாதான முயற்சிகளில் உறுதியாகச் செயற்படுதல் சாத்தியமேயில்லை.

தமிழ் மக்களும் அதனை நம்பத் தயாராகவில்லை.

# நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# வீதி அமைப்புக்கள் சீரானாலும் மக்கள் பழக்கம் சீராகவேணுமே!

மூன்று பாதைகள் கொண்ட அகலமான வீதியில் வெள்ளைக் கோடுகளுக்கிடையில் மணிக்கு நூற்றைம்பது கிலோமீற்றர் வேகத்தில் சில சமயம் இருநூறு கிலோமீற்றர் வேகத்திலும் மோட்டார் கார் போய்க்கொண்டிருக்கிறது. இதேசமயம் எதிர்த் திசையிலும் அடுத்த பக்கத்தில் இதேபோன்று மூன்று வழிப் பாதைகளில் வாகனங்கள் வேகமாக வந்து கொண்டிருக்கின்றன. இருபக்கப் போக்குவரத்துப் பாதைகளுக்கு நடுவே உயரமாக இருபக்கமும் த[illegible]புச் சுவர்களுக்கு மத்தியில் பூமரங்களும் செடி கொடிகளும் த[illegible]களாய் நிற்கின்றன.

மூன்றுவழிப்பாதையில் முதலிலுள்ள இரு வெள்ளைக் கோடுகளுக்குள் மோட்டார்கார் ஒன்று மிகவேகமாகச் சென்றுகொண்டிருக்கிறது இக்காரைச் செலுத்துபவர் தன்முன்பாகவும் அருகேயும் உள்ள கண்ணாடிகளில் பார்த்துக் கொள்கிறார்.

பின்னால் மற்றொரு வாகனம் வேகமாக வருவதைக் கவனித்ததும் வெள்ளைக் கோட்டைத் தாண்டி அடுத்தவழிக்குச் செல்கிறார். இவர் இரண்டாவது வழிக்குச் சென்றதும் பின்னால் வேகமாக வந்த மோட்டார் கார் முதல் வழியில் வேகமாகச் சென்று விடுகிறது. இதன் பின் முதல் வழியிலிருந்து இரண்டாவது வழிக்குச் சென்ற கார் மீண்டும் முதல் வழிக்கே வந்து விடுகிறது.

இப்படி வழிவிட்டுக் கொடுத்து முதல் வழியிலும் இரண்டாவது வழியிலும் வாகனங்கள் வேகமாகச் செல்கின்றன. இதேசமயம் இப்பாதையிலுள்ள மற்றொரு நகருக்கச் செல்ல வேண்டிய மோட்டார் வாகனம் கண்ணாடி ஊடாகப் பின்னால் வாகனங்கள் வருவதை சாரதி பார்த்து அனுசரித்து மூன்றாவது ஒழுங்கைக்கு அந்த இடம் நெருங்குவதற்கு உரிய தொலைவிலேயே வாகனத்தைக் கொண்டு செல்வார்.

இவர் செல்லும் இடத்தில் ஒரு வீதி அதுவும் இரண்டு மூன்று வழிப்பாதைகள் கொண்டவை இந்த வாகனத்தை நகருக்குள் கொண்டு செல்லும். உதாரணத்துக்கு கண்டிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் வாகனங்கள் வேகமாகச் சென்று கொண்டிருக்கும் அதேசமயம் இடது பக்கத்தில் மூன்றாவதும் கடைசியாகவிருக்கும் வழியிலிருந்து சாவகச்சேரி நகருக்கு ஒரு பாதைசெல்லும் இதேபோல் ஒவ்வொரு நகருக்கும் செல்வதற்கும் பாதைகள் வழிகாட்டும்.

இதனால் கண்டி வீதியில் கண்டிக்கோ கொழும்புக்கோ செல்லும் நெடுஞ்சாலைகளில் செல்லும் வாகனங்கள் இடையில் எந்த வாகனங்களின் குறுக்கீடும் இடையூறும் இல்லாமல் பயணம் செய்ய முடியும். நெடுஞ்சாலையில் செல்லும் வாகனங்கள் யாவும் அந்தந்த வெள்ளைக் கோடுகளுக்குட்பட்ட வழிகளில் பயணம் செய்தாலும் ஒன்றை ஒன்று முந்திச் செல்ல வேண்டிய அவசியமில்லாமல் கார் ஓட்டுபவர் கண்ணாடியில் பார்த்து வழிவிட்டு ஒதுங்கி அந்தந்த வழிகளில் செல்வதாலும் விபத்தும் ஏற்படாது ஹோண் அலறல் சத்தத்துக்கும் அவசியம் இருக்காது. மூன்றாவது வழி அல்லது ஒழுங்கையிலிருந்து நகருக்குள் செல்லும் பாதையும் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் திட்டமிடும் நகரங்களுக்கான பாதைகளும் போவதற்கும் வருவதற்கும் இருவழிப்பாதைகளாக அமைக்கப்படுவதால் விபத்து நேருவதற்கு வாய்ப்பிருக்காது.

இருவழிப்பாதைகளின் கடைசியில் சைக்கிள்கள் போவதற்குத் தனி வழிகளில் அமைக்கப்படும் போது மோட்டார் வாகனங்களுக்கிடையில் மாட்டிக் கொள்ள வேண்டிய அவசியமும் ஏற்படாது.

இப்படி புதிய போக்கவரத்து முறைகளை திட்டமிட்டுச் செயற்படுத்தப்படவிருக்கும் புதிய பாதை அமைப்பில் செயற்படுத்தலாம் என்று பரமசிவம் ஒரு நீண்ட விளக்கம் சொன்னார். இப்படித் தான் மேல் நாடுகளில் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. போக்குவரத்து விதிமுறைகளும் இதற்கேற்ப பின்பற்றப்பட்டுவருகின்றன என்றும் பரமசிவம் சொன்னார்.

அது சரி நீர் சொல்வதைக் கேட்பதற்கு எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது. நமது நாட்டில் பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் வாகனங்கள் சிலயார் தூரம் சென்றதுமே பலவித ஓசைகளை எழுப்பி மேலும் நகரமுடியாதென்று சண்டித்தனம் செய்துவிடுகின்றன. பொருள்கள் ஏற்றிவரும் லொறிகள் வழியில் படுத்தே விடுகின்றன. வழியில் இந்த வாகனங்கள் இடக்குப் பண்ணினால் நீர் சொன்ன ஒழுங்குமுறையில் வாகனங்கள் எப்படி வெள்ளைக்கோடுகளுக்குள் பயணம்செய்ய முடியும் என்று கேட்டேன்.

நீர் கேட்டது நியாயமான கேள்வி. அந்த மாதிரிப்போக்குவரத்து வீதிகள் அமையும்போது போக்குவரத்து விதிகளும் ஒழுங்காகச் செயற்பட்டுத்தானாகவேண்டும். ஆண்டுக்கொரு தடவை வாகனங்கள் யாவும் நல்லமுறையில் பரிசோதனை செய்யப்படவேண்டும். வீதிகளில் செல்வதற்குத் தகுதியில்லாத வாகனங்கள் பழைய தகர டப்பாக்களாக்கப்படவேண்டும். வாகன சாரதிகள் குறிப்பாக லொறி, பஸ் சாரதிகள் குறிப்பிட்ட மணி நேரமே வாகனங்கள் செலுத்தவேண்டும் மேலதிக நேர வேலையென்று வாகனங்களைச் செலுத்த அனுமதிக்கமுடியாது. இவர்கள் பரிசோதிக்கப்பட வேண்டும். வைத்திய பரிசோதனைகளுக்குள்ளாக வேண்டும். மதுபானம் பாவித்தவர்கள் வாகனத்தைச் செலுத்துவதற்கு அனுமதிக்கவே கூடாது. நல்ல நிலையிலுள்ள வாகனங்கள் மட்டுமேதான் வீதியில் செல்ல முடியுமாகவிருந்தால் வீதிகளில் வாகனங்களும் விதிமுறைகளைப் பின்பற்றிச் செல்லமுடியும். நடுவீதிகளில் எந்த வாகனமும் இடக்குப்பண்ணி நிற்கவேண்டி வராது என்றார் பரமசிவம்.

யாழ்ப்பாணத்தில் ஆறு பிரதான வீதிகள் அகலமாக்கப்படுவதற்கும் ஏ-9 பாதை சீராக்கப்படுவதற்கும் தீர்மானித்து நடவடிக்கை எடுப்பதைக் கேள்விப்பட்டதுமே மேல்நாடுகளில் போக்குவரத்துமுறை பற்றிச் சொல்லியிருக்கின்றீர். நல்ல யோசனைதான். என்னதான் திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தினாலும் நமது மக்கள் நமது சொத்து, என்று எல்லோருமே நாட்டுப்பற்றுடன் நடந்துகொண்டால் எல்லாமே ஒழுங்காகவும் இருக்கும், அமைதியாகவும் இருக்கும், நாடும் முன்னேறும் என்றேன்.

மேல் நாடுகளில் வீதியோரங்களில் பஸ்தரிப்பிடங்கள் இருக்கின்றன. அந்த இடத்தில் நமது நாட்டில்போல தெரிந்த பெயர், காதலி பெயர், அசிங்கமான வார்த்தைகள் கல்வெட்டில் பதித்த மாதிரி பதித்தாவைக்கிறார்கள்? பஸ்களில் கண்ணாடிகளிலும், ஆசனங்களிலும் எழுத்துப் பொறிக்கிறார்களா. ஆசனங்களைப் பிய்த்தெடுத்து விளையாடுகிறார்களா? வீதிகளின் இரு மருங்குகளிலும் வளர்க்கும் பூச்செடிகளை அல்லது மரங்களைப் பிய்த்துப் பிடுங்கி எறிகிறார்களா? பெயர்ப் பலகைகள் விளம்பரப் பலகைகளுக்கு குறிபார்த்து எறிந்து நாசமாக்குகிறார்களா? என்று கேட்டார் பரமசிவம். மக்கள் நாடு நகரத்தை அழகாகவும், சீராகவும் வைத்திருக்கவேண்டுமென்று சிந்திக்காதவரை எதுவும் சிறப்பாகச் செயற்படமுடியாது என்றெழுந்தார் பரமசிவம்.

வீதி அமைப்புகள் சீராகவந்தால், வீதி விதிமுறைகளும் சரியாகப் பின்பற்றப்பட்டால் ஒரு மணித்தியாலத்தில் நாங்கள் கொழும்புக்குப் போகமுடியும் என்று சொல்லிக்கொண்டே போனார் பரமசிவம்.

நமக்கு நாட்டுப்பற்று முதலில் தேவை. ஒருவருக்கொருவர் குழிதோண்டுவது பற்றிச் சிந்தித்தால் நாட்டுப்பற்று எப்படி வரும். இதுமட்டுமல்ல சிறுவர் வகுப்பிலேயே நாட்டுப்பற்று ஊட்டப்படுவது அவசியம் என்றும் அவர் சொல்லிக்கொண்டே போனார்.

# வாசகர் நோக்கு

## வேகக்கட்டுப்பாடு வேண்டும் !

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட வீதிகளில் வாகனப் போக்குவரத்துகள் அதிகரித்துள்ளமையாலும் வாகனங்களின் அதிகரித்த வேகத்தினாலும் மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டி உள்ளது.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளான நுணாவில் சந்தி முதல் சாவகச்சேரி நகரம் வரையிலும் சங்கத்தானை தொடக்கம் சாவகச்சேரி நகரம் வரையிலும் உள்ள இப்பகுதிகளிலேயே வாகனங்களின் அதிகரித்த வேகம் காணப்படுகிறது.

இதன்காரணமாக பாடசாலை மாணவர்கள் உட்பட வீதியால் செல்வோர் பலரும் பல சிரமங்களுக்கு உள்ளாக வேண்டி இருக்கின்றது. குறிப்பாக விபத்து சம்பவங்களும் ஏற்பட வாய்ப்பாக இருக்கின்றது. அச்சத்துடனேயே நடமாட வேண்டியிருக்கிறது.

பொதுவாக நகரப் பிரதேசங்களுக்குள் வாகனங்களின் வேகம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருக்க வேண்டும். ஆனால் அதனை பின்பற்றாமல் இவ்வாறு வாகனங்கள் அதிகரித்த வேகத்தில் செல்கின்றன.

அத்துடன் வீதியூடாக தென் பகுதிகளிலிருந்து பல தனியார் மற்றும் கனரக வாகனங்களும் பயணிக்கின்றன. இவையும் அதிகரித்த வேகத்தில் செல்வதால் விபத்து சம்பவங்கள் ஏற்பட மேலும் வாய்ப்பாக அமைகின்றது.

எனவே குறிப்பிட்ட இவ்வீதிப் பகுதியில் வாகனங்களின் வேகத்தை கட்டுப்படுத்தச் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஐ. சிவமூர்த்தி — சாவகச்சேரி.

# இலங்கை சோதிடத்துறையில் முதன்முதலாக கலாபூஷண விருதுபெற்ற சிதம்பரநாத குருக்கள்




தென்மராட்சியில் 2004 ஆம் ஆண்டுக்கான கலாபூஷணம் விருது பெற்றவர்கள் இருவர். பளை பல்லிசை நாடகக் கலைஞர் செல்லையா சின்னத்தம்பி, திருக்கணித பஞ்சாங்க கணிதர் மட்டுவிலூர் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள் ஆகியோர் ஆவர்.

தென்மராட்சிக்குப் பெருமை சேர்த்துள்ள இவர்களுள் ஒருவரான வேதாகம சோதிட பூஷணம் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள் இலங்கையில் முதன்முதலாக சோதிடக்கலை மற்றும் சிவாசார்யத் துறைக்கான கலாபூஷணம் விருதுபெற்றவராவார்.

இந்துக்களின் கலாசாரப்படி சிவாசாரியராக விளங்கும் ஒருவரே இந்துக்களின் வாழ்வியல் நெறி, கலாசார விழுமியங்கள், இறைவழிபாடு, ஆன்மீகக் கோட்பாடுகள் என்பவற்றுக்கான வழிகாட்டியாகவும் விளங்குகின்றார். ஏனைய மதங்களைப் போலவே இந்து மதத்திலும் குலகுரு வானவர் வாழ்வுக்கு வழிகாட்டுபவராக இருந்தாலும் இந்து சமயத்தில் அந்தப் பண்பு கணிப்பிடக் கூடியளவு நடைமுறைச் சாத்தியமாகத் தற்காலத்தில் இல்லை என்பது கசப்பான உண்மையாகும்.

ஆலயம் சம்பந்தமான கட்டடக் கலை, நித்திய நைமித்திய பூசை முறைகள், வேத, ஆகம சாஸ்திரங்கள், அடியார்களின் பூர்வ அபரக் கிரியை முறைகள், சோதிடசாஸ்திர தெளிவு, விரத நிர்ணயக் கோட்பாடுகள் என்பவற்றிலெல்லாம் சந்தேகங்கள், குழப்பங்கள் ஏற்படுமிடத்து நிவர்த்திக்கக்கூடிய அறிவார்ந்தவர்கள் மெல்ல மெல்ல அருகி வருகின்ற காலமிது.

இளந்தலைமுறை சிவாசார்யர்களிடம் இவற்றை ஐயந்திரிபுறத் தெரிந்து வைத்திருக்கவேண்டும் என்ற அவாவும் அதிகமாக இல்லை எனலாம். இந்த நிலையில் அந்தத் துறைசார் விற்பன்னர் ஒருவருக்கு கலாபூஷணம் விருது கிடைக்கப்பெற்றமை இந்துக்களுக்கும், இந்து கலாசார சீலர்களுக்கும் கிடைத்த கௌரவமேயாகும்.

**''சிவாசார்யப் பணி - ஆலய விவகாரம்''**

வியாகரண சிரோமணி கி.சீதாராம சாஸ்திரிகள், சிரோமணி கி.நாராயண சாஸ்திரிகள் ஆகியோரிடம் சமஸ்கிருத மொழி இலக்கண இலக்கியத்தையும், வேத அத்யயனத்தையும் கற்றுத்தேர்ந்த இவர் பாடசாலைக் கல்வியிலேயே தீவிர கவனஞ் செலுத்தியிருந்தார். சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவரான இவர் - தமிழ், கணிதம், ஆங்கிலம் என்பவற்றில் தேர்ச்சி பெற்றிருந்ததோடு, வகுப்பில் முதல் நிலை மாணாக்கராகவும் திகழ்ந்திருந்தார்.

எனினும் பஞ்சாங்க கணிதர் சுப்பிரமணிய ஐயர், பொன்னுச்சாமிக் குருக்கள் ஆகியோரின் மறைவைத் தொடர்ந்து இரு குடும்பத்திலேயும் மூத்தவரான இவர் இவ்விரு துறை சார் பொறுப்புகளையும் கவனத்திலிருத்த வேண்டியவரானார். இவரது சிவாசார்யாபிஷேகம் 1963 இல் நிகழ்ந்து, சிறிது காலத்தில் இந்திய சிவாசார்யர்கள் சாஸ்திரிகளின் முழுக் கவனத்தில் நிகழ்ந்த சிலாபம் முன்னேஸ்வரம் சிவன் மஹாகும்பாபிஷேகத்தில் இளம் சிவாசார்யராகத் தனது முதலாவது கும்பாபிஷேக விழாவில் கலந்துகொண்டார்.

அந்த நிகழ்வில் பங்கேற்றதன் மூலம் தனது ஆற்றலை வெளிப்படுத்தி பல அறிஞர்களின் பாராட்டுகளைப் பெற்றார். இது அவரது துறைசார் உந்துசக்தியாகவும் அமைந்தது. தொடர்ந்து இவரது இளமைக்கால சிவாசார்யப் பணியில் தென்மராட்சிப் பிரதேச ஆலயங்கள் பலவும் களமாகின. உசன் கந்தசுவாமி கோவில், மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில், கைதடி கயற்றசிட்டி கந்தசுவாமி கோவில் உட்பட பல ஆலயங்களில் மஹோற்சவ குருவாகவும், இன்னும் பல ஆலயங்களில் விசேட குருவாகவும் இருந்து வந்தார். ஆயினும் குறிப்பிட்ட காலங்களின் பின்னர் அந்தந்த ஆலய சிவாசார்ய வழித்தோன்றல்களுக்கு வழிவிட்டு பல இளந்தலைமுறை சிவாசார்யர் உருவாக வழிகாட்டி ஒதுங்கிக்கொண்டார்.

இவரது நெறிப்படுத்தலில் இன்று பிரபல்யம் பெற்று விளங்கும் சிவாசார்யர்கள் பலர் உருவாகியிருந்தனர். அவர்களுள் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள், கைதடி கயற்றசிட்டி கந்தசுவாமி கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ ஐயாத்துரைக் குருக்கள், ஜெகநாதக் குருக்கள், கணேசக் குருக்கள், சோமாஸ்கந்தக் குருக்கள், கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் பிரதமகுரு இரத்தினேஸ்வரக் குருக்கள் ஆகியோர் குறிப்பிடக்கூடியவர்களுள் சிலராவர்.

இவரது குருத்துவப்பணி ஆகமக் கிரியைகளுடன் மட்டும் நின்றுவிடவில்லை. வைதீகக் கிரியைகளையும் அவ்வப்போது ஆற்றிவந்தார். அந்தணர்களின் பூர்வ அபரக் கிரியைகள் ஆற்றுவதிலும் தக்கவராகக் காண்பித்துள்ளார்கள்.

இவர் பணியாற்றிய பல ஆலயங்கள் இவரது முழுமையான ஆளுமையைப் பெற்று நிற்கின்றன. மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில், சரசை வீரமாகாளியம்மன் கோவில் போன்றன கட்டட நிர்மாணம், கோவில் அமைப்பு முறை, நித்திய, நைமித்திய ஒழுங்குகள் என்பன முழுவதுமே இவரது நேரடி கண்காணிப்பிலேயே நிகழ்ந்து வந்தன, வருகின்றன.

இவரது பணியைக் கௌரவித்து வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலய திருப்பணிச் சபையும், தென்மராட்சி சைவத்தமிழ் அபிமானிகளும் ஒன்றுகூடி, 1981 ஆம் ஆண்டில் மேற்படி ஆலய நவகுண்ட பட்ச மஹா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து, பாராட்டு விழாவெடுத்து, வேதாகம சோதிட பூஷணம் எனும் கௌரவப் பட்டத்தை பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்கள் மூலமாக வழங்கினர்.

இதேபோல் சரசை வீரமாகாளியம்மன் தேவஸ்தானத்தினர், தொண்டர் சபையினர் மற்றும் சரசை வாழ் மக்கள் அனுசரணையோடு 1985 ஆம் ஆண்டில் அந்த ஆலய பஞ்சகுண்டபட்ச மஹா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து எடுத்த பாராட்டு விழாவில் சிவாசார்ய திலகம் எனும் கௌரவப் பட்டத்தை பேராசிரியர் சு. சுப்பிரமணிய ஐயர் மூலமாக வழங்கினர்.

இவ்வாறே 1995 ஆம் ஆண்டில் வட்டக்கச்சி முருகன் ஆலய நிர்வாகத்தினர் அந்த ஆலய கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து எடுத்த பாராட்டு விழாவில் - சிவாகம பூஷணம் எனும் கௌரவப் பட்டத்தை வழங்கினர்.

1997 ஆம் ஆண்டில் மலேசியா ஸ்கொட்றோட் முருகன் ஆலய மஹா கும்பாபிஷேகத்தில் கௌரவ சிவாசார்யராகக் கலந்து சிறப்பித்தார். 2001 ஆம் ஆண்டில் லண்டனிலுள்ள பிரித்தானிய சைவத் திருக்கோவில்களின் ஒன்றியத்தின் நான்காவது மாநாட்டில் 'பஞ்சாங்கம்' என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை ஒன்றைச் சமர்ப்பித்தமையைக் கௌரவித்து அந்த மாநாட்டுக்குத் தலைமை வகித்த பேரூர் ஆதீனம் தவத்திரு தவலிங்கம் சுவாமிகளால் வேதாகம வித்தகர் என்னும் கௌரவ பட்டம் வழங்கப் பெற்று, தங்கப்பதக்கம் வழங்கி, பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

இவரது வேதாகம சோதிட புலமையும், துறைசார் அனுபவமும் கருதி இந்துக் குருமார் ஒன்றியமானது அதனது வித்துவ சபையில் உறுப்புரிமை வழங்கி, பல்வேறு சிக்கல்களுக்குத் தீர்ப்பை வழங்கும் அறிஞர்களுள் ஒருவராகக் கௌரவித்து வருகிறது. இதன் பிரகாரம் இரண்டாவது இந்து மாநாட்டில் நீண்டகால சேவைக்கென கௌரவிக்கப்பட்ட சிவாசார்யர்களுள் ஒருவரானார். திருக்கணித மார்க்க அபிமானிகளையும் உருவாக்கியது. இது ஒரு வியாபார நோக்கில் அல்லாமல் நியாயமான, சரியான மார்க்கத்தைப் பின்பற்றவைக்கும் ஒரு முயற்சியாகவே இருந்தது.

பஞ்சாங்கக் கணிதத்தில் தனது பட்டறிவு, தற்றுணிபு என்பவற்றைப் பிரயோகித்து இவர் புலம்பெயர்ந்து வாழும் இலங்கை இந்துத் தமிழ் அன்பர்கள், தாம் இலங்கையில் பின்பற்றியதுபோலவே அவ்வப்பிரதேச மத்திய நாடிற்கும் கணிப்பிடப்பெற்ற திருக்கணிதப் பஞ்சாங்கத்தை நேரடியாக உபயோகிக்கக்கூடிய வகையில் தயார்செய்து வெளியிட்டார்.

இது வேறெந்தப் பஞ்சாங்கக் கணிதரும் - ஏன் இந்தியர்கள் கூட முயலாத ஒரு விடயமாகும். உண்மையில் மேற்குலக வெளிநாடொன்றுக்கு அந்த நாட்டுக்குரிய மத்திய நாடிக்கு பஞ்சாங்கத்தை வெளியிடும்போது, புவியியல் பிரதேச வேறுபாடுகள் காரணமாக விரத நிர்ணயங்களில் ஏற்படும் சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும். இவற்றைத் துணிவோடு முயற்சித்து இன்று குவாலாலம்பூர், ரொறன்டோ, லண்டன், சூரிச் ஆகிய இடங்களை மத்திய நாடியாகக் கொண்டு, கணிப்பிடப்பெற்ற பஞ்சாங்கங்கள் முறையே மலேசியா, சிங்கப்பூர், கனடா, இங்கிலாந்து, சுவிஸ் ஆகிய நாடுகளில் உள்ள இந்துக்களின் பிரயோகத்தில் உள்ளன.

இவரது இந்த முயற்சியானது புலம்பெயர்ந்து வாழும் இந்துக்கள் மத்தியில் கலாசாரத்தைப் பேணும் ஒரு முயற்சியின் திறவுகோல் ஆகும் என்றால் மிகையில்லை.

இங்கிலாந்திலுள்ள லண்டன் திருக்கோயில்களின் ஒன்றியம் - லண்டனுக்கெனக் கணிக்கப்பெற்ற திருக்கணிதப் பஞ்சாங்கத்தையே அவ்விட ஆலயங்களில் பிரயோகிக்கச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இந்தத் திருக்கோயில்களின் ஒன்றிய வேண்டுகோளின் பிரகாரம் லீலா பஞ்சாங்கக் கலண்டரானது, திருக்கணிதப் பஞ்சாங்கக் கணிதராகிய சி.சிதம்பரநாதக் குருக்களாலேயே லண்டனுக்கெனக் கணிக்கப் பெற்று, வருடாவருடம் வெளியிடப்படுகிறது.

மேற்குலக நாடுகளுக்கெனப் பஞ்சாங்கங்களை கணிப்பிடவேண்டும் எனும் ஆர்வத்தில் அது தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டிருந்தவர் திருக்கணித பஞ்சாங்க முன்னோடிகளில் ஒருவரான கோண்டாவிலூர் பிரம்மஸ்ரீ கந்தசாமி ஐயர். இந்த வானியல் நிபுணர் இன்று எம்மிடையே இல்லை. எனினும், அவரது காலத்திலேயே அவரது அனுசரணையுடன் அவரது கனவை நனவாக்கிய பெருமையை குருக்கள் பெறுகின்றார்.

இன்று பெரும்பாலான சோதிடர்களிடம் வெளிநாடொன்றில் பிறந்த குழந்தை ஒன்றுக்கு ஜாதகம் கணிக்கச்சென்றால் - அவர்கள் பிள்ளை பிறந்த நேரத்தை இலங்கை நேரத்துக்கு மாற்றிவிட்டு, இலங்கையில் பிறந்த பிள்ளைக்கு ஜாதகம் கணிப்பதுபோல் கணித்துவிடுகிறார்கள்.

உண்மையில் அந்தநாட்டில் பிறந்த இட அட்சாம்சம் தேசாந்திரத்திற்கே ஜாதகம் கணிக்கப்படவேண்டுமென்ற அடிப்படையே இல்லாமல் உள்ள இந்த நிலையில் வேற்றுநாடொன்றுக்கு பஞ்சாங்கம் கணிப்பதென்பது சாதாரண விடயமல்ல. நாட்டுக்கு நாடு வேறுபடும் புவியியல் பிரதேச வேறுபாடுகள், திகதிக்கோட்டு வேறுபாடுகள், குளிர் - கோடைகால வேறுபாடுகள் என்பவற்றையெல்லாம் கருத்திலெடுத்து கீழைநாட்டு கலாசார விழுமியங்களுக்குரிய பஞ்சாங்கத்தை வெளியிடுவதென்பது அசாதாரண விடயமே.

சோதிடத்துறையில் இவரது பணி பரந்துபட்டது. இவர் சோதிடமலர் எனும் மாதச்சஞ்சிகை ஒன்றை இலங்கையிலிருந்து வெளியான சோதிடச் சஞ்சிகையாக உருவாக்கியவர். இது பல சோதிட ஆன்மீக எழுத்தாளர்கள் ஒன்றிணையக் களமானது.

இந்தச் சஞ்சிகையானது - பஞ்சாங்கம் பற்றிய தெளிவான கருத்தை அறிய ஒரு ஊடகமாகத் திகழ்ந்தது. இந்த மலரில் சந்தேக நிவர்த்தி, ஆய்வு மன்றம் எனும் தலைப்புக்கள் வாயிலாக மக்களின் சந்தேகங்கள், பிரச்சினைகளுக்கு ஆற்றுப்படுத்தல்களை வழங்கியிருந்தார். சோதிடம் கற்போம் எனும் பகுதிமூலம் சோதிடத்தை இலகுவாகக் கற்க வழி சமைத்திருந்தார். இவ்வாறாக சோதிடத் துறையில் இலங்கையில் காத்திரமான ஒரு இடத்தை குருக்கள் வகித்து வருகிறார்.

1995 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண இடப்பெயர்வு காலத்தில், தனது 60 ஆவது வயது ஷஷ்டியப்த பூர்த்தியைக் கண்ட இவர் - அந்தச் சமயம் 'ஸ்நபன மஞ்சரி' எனும் சமஸ்கிரத நூலை சமஸ்கிருத பண்டிதர் கி.சதாசிவக் குருக்கள் மூலம் தயார் செய்வித்து, யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீடாதிபதி ப.கோபால கிருஷ்ண ஐயர் தலைமையில் நடந்த வெளியீட்டு விழாவில் இலவசமாக அந்தனர்களுக்கு விநியோகித்தார்.

இந்தக் காலத்தில் சோதிட வகுப்பொன்றையும் இலவசமாக நடத்தியிருந்தார். யாழ்ப்பாணத்தில் அப்போது வெளிவந்துகொண்டிருந்த சில பத்திரிகைகள் இவரது அச்சகத்திலேயே பிரசுரமாகின. இவை தவிர வருடா வருடம் திருக்கணித பஞ்சாங்கம், திருக்கணித மாதக் கலண்டர் மற்றும் மாதாந்த சோதிட மாதச் சஞ்சிகை, சோதிட மலர் என்பவற்றைப் பிரசுரிக்கும் ஒரு பிரசுராலயமாகத் திருக்கணித நிலையம் விளங்கியது. மேலும் பல் வேறு நூல்களை அந்தக் காலகட்டத்தில் அச்சிட்டு, இளம் நூலாசிரியர்களது நூல்கள் வெளிவர ஆதரவு நல்கினார்.

இத்தகைய சிறப்புக்களையும் - பெருமைகளையும் கொண்ட குருக்கள் இந்து கலாசார அமைச்சு 2004 ஆம் ஆண்டு கலாபூஷண விருது வழங்கி அவரைக் கௌரவித்தது.

**செ.சுதாகரன்**

---

பகுதி 78 **சங்கர்**

# காற்றே நீ எம் கதை கேளாயோ... அலையே நீ எம் நிலை உணராயோ



சிலைகளை நட்டு காணிக் கடை விரிக்கும் அரசியல் வியாபாரத்தை நிறுத்துவதற்கு உரிய உத்தரவாதத்தை அரசிடம் இருந்து பெற வேண்டும். இதன் மூலம் உல்லை முஸ்லிம்களை அழிவில் இருந்து பாதுகாக்கவேண்டும்.

ஜனவரி ரவூப் ஹக்கீமைப் போலவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரனும் மாங்கன்றுகளை நடுவது போன்று, புத்தர் சிலைகளை நடுவதாகக் குறிப்பிட்டு, இந்த குடியேற்ற முயற்சிகளைக் கண்டித்தார்.

ஏற்கனவே உல்லையில் இருந்த 48 குடும்பங்களை 100 குடும்பங்களாக சுனாமி அழிவின்போது பதியப்பட்டுள்ளதாக செய்திகள் வெளி வந்திருந்தன. ஜனாப் ரவூப் ஹக்கீமின் உரை குறித்து - சிஹல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் வண ஓமல்பே சோபிததேரர் விடுத்த அறிக்கை முழு முஸ்லிம் இனத்தையுமே அவமானப்படுத்தும் விதமாக அமைந்திருந்தது. அதன் சில பகுதிகள் பின்வருமாறு -

இலங்கையில் எங்கெல்லாம் புத்தர் சிலைகள் அமைக்கப்பட வேண்டுமென்ற தேசிய தீர்மானத்தை எடுக்க வேண்டிய உரிமை இந்த நாட்டின் உரிமையாளர்களான சிங்கள பௌத்தர்களுக்கே உண்டு. ரவூப் ஹக்கீமுக்கு உரிமை கிடையாது. பௌத்தர்களுக்கு பாடம் கற்பிக்கும் உரிமை ஹக்கீமுக்கோ, முஸ்லிம்களுக்கோ கிடையாது.'

ரவூப் ஹக்கீமின் கருத்துக்கள் இலங்கையின் ஒழுக்கம், கலாசாரம் வரலாற்றை உருவாக்கிய இனமான சிங்கள பௌத்தர்களுக்கு விடுக்கப்பட்டசவால் மட்டுமல்ல; அச்சுறுத்தலாகும்.

கிழக்கின் உண்மையான உரிமையாளர்களான சிங்கள பௌத்தர்களை அடிமைப்படுத்தி, வரலாற்றை மூடிமறைத்து, பொய்யான முஸ்லிம் வரலாற்றை வெளிக்காட்ட முனைவருக்கு இந்தக் கருத்து உந்துதல் வழங்குவதாக அமைந்துள்ளது.

மேலும் சுனாமியைத் தொடர்ந்து மக்கள் மனதில் ஏற்பட்டுள்ள பீதி மிகப் பெரிதாகும். இதற்கு "நாங்கள் எல்லாம் விசர் நாயிட நிலையில் இருக்கிறம். விசர் நாய்க்கும் தண்ணியக் கண்டால் பயம். எங்களுக்கும் அப்படித்தான்" என்று கோட்டைக் கல்லாற்றில் இந்திரா என்ற யுவதி கூறியமை இதற்கு நல்ல உதாரணம். மீண்டும் ஒரு சுனாமி ஏற்படலாம் என மார்ச் 28 ஆம் திகதி அரசு அறிவித்தவுடன் ஏற்பட்ட நிலைமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

அதிர்ச்சி மற்றும் விபத்து என்பவற்றால் பத்துப்பேர் உயிரிழந்துள்ளனர். இதில் அம்பாறை மாவட்டத்தில் மட்டும் நால்வர் உயிரிழந்துள்ளனர். அட்டாளைச்சேனை 7 ஆம் குறிச்சியைச் சேர்ந்த வெள்ளைத்தம்பி (வயது 73) மற்றும் 13 ஆம் குறிச்சியைச் சேர்ந்த ஷக்கினா உம்மா (வயது 60) ஆகியோர் மரணமடைந்துள்ளனர்.

பெரிய நீலாவணையைச் சேர்ந்த வைரவன் தங்கப்பிள்ளை (வயது 55) பாதுகாப்பான இடம் தேடி ஓடுகையில் கீழே விழுந்ததில் கல்லில் மோதுண்டு உயிரிழந்தார். அதே போல சம்மாந்துறை மாவடிப் பாடசாலையைச் சேர்ந்த மொஹிதீன் பிச்சை ரிபாய் (வயது 18) எனும் மாணவன் ஓடும்போது லொறியில் மோதி உயிரிழந்தார்.

மேலும் பொறுப்பற்ற விதத்தில் பரப்பட்ட வதந்திகளால் இடம் பெயர்ந்தோர் முகாம்களிலிருந்து மக்கள் சிதறி ஓடுகையில், உயிரிழப்பு ஏற்பட்ட சம்பவங்களும் உண்டு. திருக்கோயில் மற்றும் கல்முனையில் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்ந்தன. மக்களின் பதற்றத்தைப் பயன்படுத்தி - அவர்களின் உடமைகளைக் களவாடும் நோக்கத்திலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றன.

இன்னொரு விடயம் நீர் தொடர்பான மனித குலத்தின் அடிப்படைப் பண்புகளிலேயே பெரிய பிறழ்வை ஏற்படுத்தியுள்ளது. *(தொடரும்)*

# இங்கிலாந்து இளவரசர் சாள்ஸ்
# கமீலா பார்க்கர் கரம் பற்றினார்!


புதிய மனைவி கமீலா பார்க்கருடன் சாள்ஸ்!

இங்கிலாந்து இளவரசர் சாள்ஸிற்கும் அவரது நீண்ட நாள் காதலியான கமீலா பார்க்கருக்கும் நேற்று லண்டனில் திருமணம் நிறைவேறியது.

இங்கிலாந்து ராணி எலிசபெத்தின் மூத்த மகன் சாள்ஸ் இளவரசராக திகழும் இவருக்கும் டயானாவுக்கும் முதலில் திருமணம் நடந்தது. அவர்களுக்கு வில்லியம்ஸ் ஹரி என 2 மகன்கள் உள்ளனர். கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் சாள்ஸைப் பிரிந்த டயானா தனியே வசித்து வந்தார். பின்னர் ஒரு கார் விபத்தில் அவர் மரணம் அடைந்தார்.

டயானாவை விட்டு விலகிய பின்னர் கமீலா பார்க்கருக்கும் சாள்ஸுக்கும் காதல் மலர்ந்தது.56 வயதாகும் சாள்ஸ் தன்னை விட ஒரு வயது அதிகமான (57 வயது) கமீலாவை மிகவும் நேசித்தார். அவர்கள் திருமணத்துக்கு முதலில் எதிர்ப்புக் கிளம்பியது.

சாள்ஸ் உறுதியாக இருந்ததால் ராணி எலிசபெத் திருமணத்திற்குச் சம்மதித்தார். கடந்த பெப்ரவரி மாதம் திருமண நிச்சயதார்த்தம் நடந்தது. பின்னர் உலகின் முக்கிய பிரமுகர்களுக்கும் திருமண அழைப்பிதழ்கள் வழங்கப்பட்டன.

சாள்ஸ் - கமீலா திருமணம் லண்டன் மேற்கு பகுதியில் உள்ள கில்டுஹோலில் நேற்று மதியம் நடந்தது.


முதல் மனைவி அழகி டயானாவுடன் சாள்ஸ்!

இருவரும் மோதிரம் மாற்றிக் கொண்டனர். இதில் இரு குடும்பத்தின் மிக முக்கிய உறவினர்கள் மட்டும் கலந்து கொ்ண்டனர்.

இதையடுத்து கமீலாவை கரம்பிடித்தபடி லண்டன் புனித ஜோர்ஜ் தேவாலயத்துக்கு சாள்ஸ் சென்றார்.

அங்கு ஆர்ச் பிஷப் வில்லியம்ஸ் தலைமையில் மண மக்களுக்கு ஆசி வழங்கப்பட்டதுடன் விசேட பிரார்த்தனையும் நடத்தப்பட்டது.

இதையடுத்து புதுமணத் தம்பதிகள் இருவரும் முழங்காலிட்டு பாவமன்னிப்புக் கேட்டனர். நாங்கள் இருவரும் எண்ணத்தாலும் செய்கையாலும் பல தவறுகள் செய்துள்ளோம். எங்கள் பாவங்களை மன்னியுங்கள் என்று கேட்டனர். இருவரும் மறுமணம் செய்வதையொட்டி இந்த பாவமன்னிப்புக் கேட்கப்பட்டது.

சுமார் 45 நிமிடம் புனித ஜோர்ஜ் தேவாலயத்தில் திருமண நிகழ்ச்சிகள் நடந்தன. இதில் இங்கிலாந்து பிரதமர் ரொனிபிளேயர் மற்றும் அரச குடும்பத்தினர் உட்பட 800 பேர் கலந்து கொண்டனர்.


ஹரி மற்றும் வில்லியம்ஸ்

# அமெரிக்க அணு உலை கழிவுகள் மீது கிளர்ச்சிவாதிகள் தாக்குவதற்குத் திட்டம்!

(வொஷிங்ரன்)

அமெரிக்காவிலுள்ள அணு உலைக் கூடங்களில் குவிந்து கிடக்கும் அணு ஆயுதக் கழிவுகள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் அதன் மூலம் கதிரியக்க ஆபத்தை ஏற்படுத்த இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதி நியூயோர்க் நகரின் 111 மாடி கட்டடங்களை, அல் - கொய்டா கிளர்ச்சிவாதிகள், விமானம் மூலம் தாக்கியழித்தனர். இதைத் தொடர்ந்து கிளர்ச்சிவாதிகளுக்கு எதிரான போரை அமெரிக்கா தொடங்கியது.

ஆப்கானிஸ்தான், ஈராக் ஆகிய நாடுகளில் இருந்த கிளர்ச்சிவாதத்துக்கு ஆதரவான ஆட்சிகளை அமெரிக்கா அகற்றியது. அமெரிக்க ராணுவத் தாக்குதலில் கிளர்ச்சிவாதிகள் பலர் கொல்லப்பட்டாலும், அல் - கொய்டா இயக்கத்தை முற்றிலுமாக அமெரிக்க இராணுவத்தால் ஒழிக்க முடியவில்லை.

பின்லேடனும் அவரது கூட்டாளிகளும் தலைமறைவாகிவிட்டனர். அவர்கள் அமெரிக்கா மீது தாக்குதல் நடத்துவோம் என்று அவ்வப்போது அறிவித்து வருகின்றனர்.

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதி நடந்ததை விட மிகப் பெரிய அளவில் உயிரிழப்பை ஏற்படுத்தக்கூடிய தாக்குதலை நடத்த அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இதற்காக அணு ஆயுத இரசாயன உயிரியல் ஆயுதங்களைப் பயன்படுத்தவிருக்கிறார்கள்.

அமெரிக்காவில் 103 அணு உலைக் கூடங்கள் உள்ளன. அவற்றில் 90 சதவீதம் தனியாருக்குச் சொந்தமானவை.

இந்த உலைக் கூடங்களில் அணுக் கழிவுகள் குவிக்கப்பட்டு சேமித்து வைக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றின் மீது தாக்குதலை நடத்துவதன் மூலம் கதிரியக்க ஆபத்தை ஏற்படுத்த தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர்.

அணு ஆயுதத் தாக்குதல் மூலம் பெரிய அளவில உயிர்ச் சேதத்தை ஏற்படுத்த முடியும் என்று தீவிரவாதிகள் கருதுகிறார்கள்.

இந்தத் தகவலின் பேரில், அணு சக்தி கட்டுப்பாட்டுக் குழு விழிப்படைந்து அப்படி ஒரு தாக்குதல் நடப்பதை எப்படித் தடுப்பது என்பது பற்றி ஆராய்ந்து வருகிறது.

இந்த நிலையில் அணு உலைக் கூடங்களில் உள்ள கழிவுகள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துவது அவ்வளவு எளிதல்ல என்று அமெரிக்க அதிகாரிகளில் ஒரு தரப்பினர் கூறி வருகின்றனர்.




# நேபாள இராணுவம் தாக்குதல் 18 மாவோ கிளர்ச்சிவாதிகள் பலி!

நேபாளத்தில் இராணுவத்தினரின் தாக்குதலில் 18 மாவோயிஸ்ட் கிளர்ச்சிவாதிகள் கொல்லப்பட்டனர்.

நேபாளத்தில் மன்னர் கயனேந்திராவை எதிர்த்து மாவோயிஸ்டுகள் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். நாட்டில் ஜனநாயக ஆட்சியைக் கொண்டு வரவேண்டும். அவசரகால நிலையை விலக்க வேண்டும் என்று பல்வேறு கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்தனர்.

மாவோயிஸ்டுகளை ஒடுக்க ராணுவத்தினருக்கு முழு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. தலைநகர் காத்மண்டுவில் இருந்து 550 கி.மீ தொலைவில் உள்ளது ருக்கும் மாவட் டம். இங்கு நேபாள ராணுவ தலைமை அலுவலகம் அமைந்துள்ளது. அந்த அலுவலகத்தைத் தகர்க்க மாவோயிஸ்ட் கிளர்ச்சிவாதிகள் நேற்றுமுன்தினம் மாலை திடீர் தாக்குதல் நடத்தியதையடுத்து, ராணுவத்தினர் உடனடி யாக பதில் தாக்குதல் நடத்தினர்.

இரு தரப்பு மோதலில் மாவோயிஸ்ட் கிளர்ச்சிவாதிகள் 18 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். ராணுவ தலைமை அலுவலகத்தைத் தகர்க்க நான்காயிரத்துக்கும் மேற்பட்ட கிளர்ச்சிவாதிகள் ஈடுபட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். சண்டையில் ராணுவ வீரர்கள் எட்டுப் பேர் படுகாயமடைந்தனர். இரு தரப்புக்கும் 12 மணி நேரத்துக்கும் மேல் சண்டை நடந்தது. சுட்டுக்கொல்லப்பட்ட கிளர்ச்சிவாதிகளிடம் இருந்து ஏராளமான துப்பாக்கிகள் வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

# மாணவி மயூரணி கொலை வழக்கில் பாலபிரசன்னாவுக்கு ஆயுள் தண்டனை!

இலங்கை மாணவி மயூரணி மதுரையில் கொலை செய்யப்பட்ட வழக்கில் கல்லூரி மாணவர் பாலபிரசன்னாவுக்கு - ஆயுள் தண்டனையும், கொள்ளைக் குற்றத்துக்கு மேலும் 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், இந்திய மதிப்பில் ரூபா 20 000 அபராதமும் விதித்து மதுரை மாவட்ட நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை தீர்ப்பளித்தது.

இலங்கை (திருகோணமலை) யைச் சேர்ந்த மயூரணி, மதுரை அண்ணா நகரிலுள்ள தனியார் கல்லூரியொன்றில் பி.எஸ்.ஸி இரண்டாம் வருடம் படித்து வந்தார். அதே பகுதியிலுள்ள கல்லூரி நிர்வாகியின் வீட்டில் மாடியில் அவர் தங்கியிருந்தார்.

அந்த வீட்டின் இரண்டாவது மாடியில் திருகோணமலையைச் சேர்ந்த பால பிரசன்னாவும் தங்கியிருந்தார். இவர் பிளஸ் - 2 படித்து வந்தார்.

இந்த நிலையில் தான் தங்கியிருந்த அறையில் மாணவி மயூரணி கடந்த 2003 ஏப்ரல் 22 ஆம் திகதி கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார். அழுகிய நிலையில் இரு தினங்களுக்குப் பின்பே சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பாக கல்லூரி நிர்வாகி சோலைமலைத் தேவர் அவரது மனைவி ராக்கம்மாள், காவலாளி வீரணன், மாணவன் பாலபிரசன்னா அவரது நண்பர் ஹாஜி அலி ஆகியோரை அண்ணா நகர் பொலிஸ் அதிகாரி சுந்தரேசன் மற்றும் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தினர்.

இதன் பின்னர் பொலிஸ் அதிகாரி கே.மாரிமுத்து மேல் விசாரணை செய்ததில், பாலபிரசன்னா தவிர முதல் தகவல் அறிக்கையில் சேர்க்கப்பட்ட மற்றைய நால்வரும் விடுவிக்கப்பட்டனர். இதையடுத்து பாலபிரசன்னா மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

மதுரை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி ஆறுமுக பெருமாள் ஆதித்தன் முன்னிலையில் விசாரணை நடைபெற்றதில் அப்போது இந்த வழக்கை வேறு மாவட்ட நீதிமன்றத்துக்கு மாற்றவேண்டும் என உயர் நீதிமன்றத்தில் பால பிரசன்னா தரப்பில் மனுத் தாக்கல் செய்யப்பட்டதில் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டு விசாரணையை இரண்டு மாதத்தில் முடிக்க உத்தர விடப்பட்டது.


இந்த வழக்கில் சோலை மலைத் தேவர் அவரது மனைவி ராக்கம்மாள் காவலாளி வீரணன் உட்பட 42 பேர் அரச தரப்பு சாட்சிகளாகவும் எதிர் தரப்பு சாட்சிகளாக இருவரும் நீதிமன்ற அனுமதியின் பேரில் மயூரணியின் மாமா மோகன்தாஸ் ஆகியோரும் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர்.

அரச தரப்பில் வழக்கறிஞர் எம். தமிழ்ச்செல்வனும் பாலபிரசன்னா தரப்பில் விருத்தாசலம் செட்டியார், சண்முக சுந்தரம் ஆகியோரும் ஆஜராகியிருந்தனர்.

இருதரப்பு வாதங்களும் முடிவடைந்து வியாழக்கிழமை அளித்த தீர்ப்பில் பால பிரசன்னா மீது குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது என நீதிபதி ஆறுமுகப் பெருமாள் ஆதித்தன் தீர்ப்பளித்தார்.

இத் தீர்ப்பில் பிரசன்னாவுக்கு கொலை வழக்கில் ஆயுள் தண்டனையும் இந்திய மதிப்பில் 10 ஆயிரம் ரூபா அபராதமும் பொருட்களைக் கொள்ளையடித்த வழக்கில் 10 ஆண்டு கடுங்காவல் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

ஆயுள் தண்டனையையும் பத்தாண்டு கடுங்காவல் சிறைத் தண்டனையையும் தனித்தனியே அனுபவிக்க வேண்டுமென நீதிபதி குறிப்பிட்டார்.



வட அமெரிக்காவின் பல பகுதிகளிலும் நேற்று முன்தினம் அவதானிக்கப்பட்ட சூரிய கிரகணத்தின் இருவேறு காட்சிகள்.

# கிளர்ச்சிவாதிகளின் தாக்குதலில் 15 ஈராக்படையினர் உயிரிழந்தனர்!




(பாக்தாதி)

ஈராக்கிய கிளர்ச்சிவாதிகள் நடத்திய தாக்குதலில் 15 ஈராக்கிய படையினர் கொல்லப்பட்டதாக பொலிஸாரும் அதிகாரிகளும் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் தலைநகர் பாக்தாத்தின் தென்பகுதி நகரான லத்திபியாவில் இடம்பெற்றது. இந்தத தாக்குதல் நடத்தப்பட்ட விதம் குறித்த தகவல்கள் எவையும் தெளிவாகத் தெரியவரவில்லை.

படையினர் ட்ரக்கில் பயணம் செய்து கொண்டிருந்த வேளை கிளர்ச்சிவாதிகள் அந்த வாகனத்தை பலவந்தமாக தடுத்து நிறுத்தி அதிலிருந்த படையினரை சுட்டுக்கொன்றதாக மக்முத்தியா நகரப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனால், ட்ரக்கில் சென்ற படையினர் வீதியோர குண்டுவெடிப்பில் சிக்கியே உயிரிழந்ததாக ஈராக்கிய பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் ஏ.எவ்.பி செய்தி நிறுனத்திற்குத் தெரிவித்தனர்.

இதேவேளை, அமெரிக்க கூட்டணிப் படைகளால் ஈராக்தலைநகர் பாக்தாத் கைப்பற்றப்பட்ட இரண்டாவது ஆண்டு நிறைவு தினமான நேற்று அமெரிக்க கூட்டணிப்படைகளுக்கெதிராக பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஈராக்கியர்கள், ஈராக்கிலுள்ள பேடஸ் சதுக்கத்தில் மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் நேற்று முன்தினமிரவே இந்தச் சதுக்கத்தில் ஒன்று கூடியிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேற வேண்டுமெனவும் சதாம் ஹுசைனே தமது உதவியாளர் எனவும் கோஷங்களை எழுப்பினர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஜே.வி.பி எம்.பி கைதாகி விடுதலை!

(கொழும்பு)

ஜே.வி.பியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்தவிஜயசேகர பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

டெங்கு நோய் தொடர்பாக சுகாதார அதிகாரி ஒருவரை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஜயந்த விஜயசேகர நேற்று முன்தினம் கந்தளாய் நீதிமன்ற கட்டடத் தொகுதியில் இரண்டு மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டபின்பு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

ஏற்கனவே இவருக்கு இந்தக் குற்றச்சாட்டின் பேரில் அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தபோதிலும் அவர் உரிய வகையில் நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கவில்லை இதனை அடுத்தே அவர் கைது செய்யப்பட்டார். (01)

# பயணிகள் பஸ் தடம்புரண்டதில் இரண்டு பயணிகள் படுகாயம்!

## மண்கும்பானில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவிலிருந்து யாழ் நோக்கி வந்துகொண்டிருந்த மினிபஸ் மண்கும்பான் பிள்ளையார் கோவிலுக்கு சமீபமாக தடம்புரண்டதில் அதில் பயணம் செய்த இருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் புங்குடுதீவை சேர்ந்த ஓய்வுவெற்ற அதிபர் சி.இரத்தின சபாபதி (வயது-79) உரும்பிராய் புளியடியைச் சேர்ந்த ஏ.லக்ஷ்மி (வயது-50) என்பவர்களே காயமடைந்து சிகிச்சைபெற்றுவருகின்றனர்.

இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது -

நேற்று நண்பகல் 12 மணியளவில் புங்குடுதீவிலிருந்து வந்த வேளை மண்கும்பான் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையாக நேர்எதிரே வந்த வாகனத்திற்கு விலகி வழி விட முற்பட்டவேளையே இச்சம்பவம் இடம்பெற்றதாக கூறப்படுகிறது.

இச்சம்பவத்தில் மினி பஸ்சில் வந்தவர்களில் இருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் மேலும் பலர் சிறு கபாயங்களுக்குள்ளாகி தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதாகவும் கூறப்படுகிறது.

# சீனப்பிரதமர் இந்தியா பயணம்

(கொழும்பு)

இரண்டு நாள் விஜயமாக இலங்கைக்கு வந்திருந்த சீனப் பிரதமர் வென்ஜியாயோ நேற்று மாலை புதுடெல்கிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

கட்டுநாயக்காவில் இருந்து நேற்று மாலை 4.30 மணியளவில் சீனப் பிரதமர் புறப்பட்டுச்சென்றார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை சந்தித்த சீனப் பிரதமர் ஆறு ஒப்பந்தங்களை செய்துகொண்டார்.

அத்துடன் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கரமசிங்கவையும் சீனப் பிரதமர் சந்தித்துக் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)

## சமாதானப் பேச்சுக்கள்...

கிரமசிங்க மன்மோகன்சிங் உள்ளிட்ட பல்வேறு அரசியற் பிரமுகர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தி வருகிறார். பிரதமருடனர்ன சந்திப்பில் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக விடுதலைப்புலிகளுடன் நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதில் உள்ள நெருக்கடி நிலை குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தியப்பிரதமருக்கு விளக்கினார்.

இரு தரப்பினருடனான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதால் இரு தரப்பினரும் உடன்படக் கூடிய சாத்தியமான விடயங்கள் குறித்து தாம் அவதானித்து வருவதாக இந்தியப் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்குத் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் மீள் கட்டமைப்புப் பணிகள் குறித்தும் இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

பிரதமர் மன்மோகன்சிங்குடனான சந்திப்பின் பின்னர் உள்துறை அமைச்சர் நட்வர்சிங்கைச் சந்தித்த ரணில் இருநாட்டின் பாதுகாப்பு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது நாடாளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் மங்கள முனசிங்க உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்க இந்திய விஜயத்தின்போது இந்தியாவின் நிதியமைச்சர் பி.சிதம்பரத்தைச் சந்தித்து இருநாட்டின் பொருளாதார ஒத்துழைப்புக் குறித்தும் கலந்துரையாடினார்.

## இலங்கையுடனான...

கொடுப்பது தொடர்பாகவும், பழுதடைந்த கப்பலை இந்தியா தனது செலவில் பழுது பார்த்துக் கொடுப்பது தொடர்பாகவும், இந்தியா - இலங்கை இடையே இராணுவ ஒத்துழைப்பு உடன்பாடு ஏற்படுத்திக்கொள்வது குறித்தும் விவா திக்கப்பட்டது.

ஆனால், அந்த உத்தேச உடன்பாடு குறித்து, மொரிஷியஸ் பயணத்தின்போது மன்மோகன்சிங்கிடம் பத்திரிகையாளர்கள் கேட்டபோது, அது பற்றிய பேச்சுக்கள் இன்னும் முற்றுப் பெறவில்லை என்று மட்டுமே பதிலளித்தார். அதுபற்றி அவர் விரிவாகப் பேசவில்லை.

இந்தநிலையில், நேற்றுமுன்தினம் மன்மோகன்சிங்கை சந்தித்த வைகோ - இதுகுறித்து நீண்டநேரம் பேசினார். இலங்கை யுடன் இந்தியா இராணுவ உடன்பாடு வைத்துக் கொள்ளாவிட்டாலோ, பலாலி விமானத்தளத்தை சீரமைத்துக் கொடுக்கா விட்டாலோ சீனாவும், பாகிஸ்தானும் இலங்கையை தங்கள் பக்கம் வைத்துக்கொண்டு இந்தியாவுக்கு எதிராகச் செயற்படும நிலை உருவாகும் என அதிகாரிகள் தரப்பல் கூறப்படும் வாதங்கள் நியாயமற்றவை என்று வைகோ எடுத்துக்கூறியதாகத் தெரியவருகிறது.

பாகிஸ்தானும் சீனாவும் இந்தியாவின் எல்லையிலேயே இருக்கும் போது, குட்டித்தீவான இலங்கையிலிருந்து அவர்கள் இந்தியாவுக்கு எந்த ஆபத்தையும் ஏற்படுத்திவிடமுடியுமா என்றும் வைகோ கேள்வி எழுப்பியிருந்தார்.

இலங்கையுடன் இராணுவ ஒத்துழைப்பு உடன்பாடு, இலங்கை தமிழர்களின் நலனுக்கு வேட்டுவைப்பதாக அமைந்துவிடும். இலங்கை தமிழர்கள் மட்டுமன்றி, தமிழகத்தைச் சேர்ந்த தமிழர்களும் மத்திய அரசின் அப்படிப்பட்ட எந்த நடவடிக்கையையும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று வைகோ தனது கவலையை வெளிப்படுத்தியதாகவும் கூறப்படுகிறது.

## இடைக்கால நிர்வாகத்தை வழங்கக்கோரி

# தென்மராட்சி மற்றும் கிளிநொச்சியில் செவ்வாயன்று மாபெரும் பேரணிகள்!

விடுதலைப் புலிகளிடம் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரத்தை வழங்கக் கோரியும் - விடுதலைப் புலிகளின் போராளிகள் மீது படையினருடன் இணைந்த ஆயுதக்குழுக்களால் நடத்தப்படும் தாக்குதல்களைக் கண்டித்தும், தென்மராட்சியிலும் கிளிநொச்சியிலும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மாபெரும் கண்டனப் பேரணிகள் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தென்மராட்சி பொது அமைப்புக்களால் நடத்தப்படவுள்ள கண்டனப்பேரணி, காலை 10 மணிக்கு சாவகச்சேரி பஸ்நிலையத்திலிருந்து ஆரம்பமாகும். இந்தப் பேரணி தென்மராட்சி பிரதேச செயலர் பணிமனையில் மகஜர் கையளிக்கப்பட்ட பின்னர் நிறைவுபெறும்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வழங்கப்படவேண் டும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணிப்புக்கான பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

போராளிகள் படுகொலை செய்யப்படுதல் நிறுத்தப்படவேண்டும்.

யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த மக்களுக்கு நிறுத்தப்பட்ட நிவாரண உதவிகள் இயல்புவாழ்க்கை திரும்பும்வரை தொடர்ந்து வழங்கப் படவேண்டும்.

தென்மராட்சி பிரதேச கடற்தொழிலாளர்கள் சுதந்திரமாக தொழிலை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை முன் வைத்தே இந்தப் பேரணி நடத்தப்படவுள்ளது.

இந்தப் பேரணியில் கடற்தொழிலாளர் சங்க உறுப்பினர்கள், நிவாரண வெட்டுக்கு உட்பட்ட குடும்பங்கள், பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை - கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் இருந்தும், கிளிநொச்சி பண்பாட்டு மண்டப முன்றலில் இருந்தும் இருமுனைகளில் ஆரம்பமாகும் பேரணி, அரச செயலகத்தைச் சென்றடைந்து அங்கு கண்டனக் கூட்டம் நடைபெறும். இதையடுத்து மகஜர் கையளிப்பு இடம்பெறும்.

இந்தக் கண்டனப் பேரணிக்கான ஏற்பாடுகளை கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் மேற்கொண்டுள்ளது.

## மேதினக்கூட்டங்களுக்கு

# மைதானங்களை ஒதுக்குவதில் பிரதான கட்சிகளிடையே போட்டி!

எதிர்வரும் மேதினக் கூட்டங்களை நடத்துவதற்கான மைதானங்களை ஒதுக்குவதில் இரண்டு பிரதான கட்சிகளும் பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கியதேசிய கட்சி ஏற்கனவே கொழும்பு நகரசபை மைதானத்தை தமது மேதின நிகழ்வுக்காக ஒதுக்கியுள்ளது.

ஜே.வி.பி வருடந்தோறும் பி.ஆர்.சி மைதனத்தில் மேதின நிகழ்வை நடத்தி வந்தது.

எனினும், இந்த முறை பி.ஆர்.சி மைதான நிர்வாகம் புனரமைப்பு பணிகள் நடைபெற்றுவருவதால் ஜே.வி.பிக்கு அதனை வழங்க மறுத்துள்ளது.

இந்த நிலையில் ஜே.வி.பி கம்பல் மைதானத்தில் தமது மே தின நிகழ்வை நடத்த முயற்சித்தபோதும் வழமையாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மேதின ஊர்வலம் கம்பல் பூங்காவில் இருந்து ஆரம்பமாவதால் அதற்கு வாய்ப்பில்லாமல் போயுள்ளது.

இதேவேளை, தமது மேதின நிகழ்வில் ஜனாதிபதி பங்கேற்பதால் நகரசபை மைதானத்தை தமக்கு விட்டுத்தருமாறு சிறிலங்கா சுதந்திர கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

எனினும், அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி மறுப்புத் தெரிவித்தது.

இந்த நிலையில் மே தின நிகழ்வின்போது போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக பிரதி பொலிஸ் மா அதிபர் சிறிசேன ஹேரத்தினால் இரண்டுமுறை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டங்கள் ரத்துச் செய்யப்பட்டன.

## சிகிச்சையளிக்க விடாமல்...

வழங்குமாறு திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் கண்காணிப்புக் குழுவினரிடம் கோரிக்கை விடுத்தார்.

வன்னிக்குச் செல்வதற்கு நேரம் போதாமையால் மாற்றுவழிகளை கோருமாறு கண்காணிப்புக் குழுவினர் தரப்பில் எழிலனுக்குத் தெரிவிக்கப்பட்டது.

துணைப்படை வீரரின் ஆபத்தான நிலைமையை கருத்தில் கொண்டு அவரைத் திருகோணமலை மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிப்பதற்காக வழித்துணை வழங்குமாறு கண்காணிப்புக் குழுவினரிடம் எழிலன் மீண்டும் கோரிக்கை விடுத்திருந்தார்.

ஈச்சிலம் பற்றிலிருந்து திருகோணமலை பொது வைத்தியசாலை வரையான வீதிகளிலுள்ள இராணுவத்தினருக்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டதாகவும் அம்புலன்ஸ் வண்டியில் அவர்களை அனுப்பிவைக்குமாறு கண்காணிப்புக் குழுவினர் எழிலனுக்கு அறிவித்திருந்தனர்.

இதனை அடுத்து ஈச்சிலம்பற்றிலுள்ள திலீபன் மருத்துவமனையிலிருந்து அம்புலன்ஸ் வண்டி மூலம் பொதுமகன் ஒருவரின் உதவியுடன் திருகோணமலை பொது வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் கட்டைப்பறிச்சான் இராணுவ சோதனைச்சாவடியில் வழிமறித்த படையினர் இவர்களை செல்ல அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்து தடுத்து நிறுத்தினர்.

இது தொடர்பாகக் கண்காணிப்புக் குழுவினருக்கு எழிலன் தெரிவித்த போது கண்காணிப்புக்குழுவினர் இராணுவத் தரப்பினருடன் பேச்சுக்களை நடத்தியபோதிலும் அவர்கள் அனுமதி வழங்க மறுத்ததை அடுத்து நான்கு மணித்தியாலத்தின் பின்னர் மீண்டும் ஈச்சிலம்பற்றிலுள்ள திலீபன் மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றபோதிலும் இவரது நிலைமை ஆபத்தான நிலையில் இருப்பதாகப் படுகிறது. (10)

## விடுதலைப் புலி...

குழுவினரும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதற்குமுன்னர் விடுதலைப் புலிகளின் எட்டுப்பேர் அடங்கிய அரசியல் விவகாரக்குழு தென் னாபிரிக்கா சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.


# DUBAI - POLAND TOUR



மேற்படி இரு நாடுகளுக்குமான உல்லாச பிரயாண சேவை யொன்றினை எமது நிறுவனத்தின் ஊடாக நீங்களும் பெறலாம்.

- ✈ வயதெல்லை கிடையாது
- ✈ ஆங்கிலமொழி அறிவு தேவையில்லை
- ✈ மேற்படி நாடுகளுக்கான visa பெறுவதற்காக எந்த வொரு நேர்முகப் பரீட்சையினையும் எதிர்கொள்ளத் தேவை யில்லை.
- ✈ DUBAI நாட்டில் 07 நாட்களும் POLAND நாட்டில் 07 நாட்களுமாக 14 நாட்கள் கொண்ட ஒரு பயணம்.

**மேலதிக விபரங்களுக்கு:**

MR.M.D.SILAHUDIN
*(SRI LANKA - REPRESENTATIVE)*
HOT LINE : 0777 - 578059
FAX: 011 - 2433235
HEAD OFFICE: AL SHARQ SERVICES
*(VISA, IMMIGRATION TOUR CONSULTANT)*
P.O.BOX 142
AJMAN U.A.E
HOTLINE: +971 - 508515434
FAX: +971 - 67427773
*E mail: info_alsharq@yahoo.com*






இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.04.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.